Registered as a Newspaper in Ceylon)
P. M. G. No. H. A. 59/300 of 1939.

சிவமயம்

விரோதி ௵ (1889) ஆவணி௴
௨௮ ௳ ஆரம்பமானது

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினாங்களுக்குள்

தமிழ் ரூபா 5.00	இங்கிலீசும் தமிழும் 9-00
இலங்கை இந்தியா 8-00	இங்கிலீசும் தமிழும் 12.00
தொலைவப்பகுதி 9-00	இங்கிலீசும் தமிழும் 13-00

தனிப்பிரதி சதம் 5

முற்பணமனுப்பினாலன்றிக் கவனிக்கப்படமாட்டா

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

—அப்பர் சுவாமிகள்

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு

ஒருகலம் ரூபா 10-00	அரைக்கலம் ரூபா 5-50
கால்கலம் ரூபா 4-00	ஒரு அங்குலம் ரூ. 1.00

அடுத்தமுறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

புத்தகம்—௫௧ | யாழ்ப்பாணம்:— பிரமாதி௵ வைகாசி௴ ௮௳ (1939 மே 22 திங்கட்கிழமை) | இலக்கம் ௧௨

சிவபூசை

(வண்ணை, ஆசிரியர், பிரம்ம ஸ்ரீ. க. வை. ஆத்மநாத சர்மா எழுதியது)

முற்றொடர்

புட்பவிதி

பத்திரபுட்பங்களைப் பற்றி ஆராயுமிடத்து, எடுத்துவைத்து அலர்ந்த பூவும், தானே விழுந்து கிடந்தபூவும், உதிர்ந்த பூவும், அரும்பும், தாழ்ந்த சாதியார், இழிதொழிலுடைய பெருசவர், ஆசௌசமுடையவர், நித்திய கருமம் விட்டவர், ஸ்நானஞ் செய்யாதவர் ஆதுரர் ஆகிய இவர்கள் எடுத்த பூவும், இரவிலெடுத்தபூவும், கை சீலை ஆமணக்கிலை எருக்கிலைகளில் கொண்டுவந்த பூவும், காற்றிலடிபட்ட பூவும், புழுக்கடி எச்சம் சிலந்திநூல் மயிர் என்பவற்றோடு கூடிய பூவும், மோந்த பூவும், காகம் கோழி நாய் கழுதை பன்றி குரங்கு பூனை முதலியன தீண்டிய பூவும், பூசைக்கு ஆகாவாம். திருக்கோயிலினும் அதன் சமீபத்திலும் உள்ள பூ ஆன்மார்த்த பூசைக்காகாதெனவறிக. சூரியோதயத்திலாயினும், விடிய மூன்று நாழி இரண்டு நாழிகை இன்றேல் ஒரு நாழிகைக்கு முன்னாயினும் எடுத்த பூவே உத்தமமானது. மத்தியானத்திலெடுத்த புஷ்பம் சிவபெருமான் தேவர் பிதிரர் மனிதர்களுக்கு ஆகாது. உதயத்தில் நந்தியாவர்த்தம் வெள்ளெருக்கம் பூக்கள் உத்தமம். மத்தியானத்தில் அலரி, தாமரை, தும்பைப் பூக்கள் உவந்தவை. மாலைக் காலத்தில மல்லிகை, கருமத்தை, சண்பகப்பூக்கள் ஏற்றன. அர்த்தராத்திரியில் உடப்பு, பொன்மத்தை, சிறுசண்பகம், பிச்சிப்பூக்கள் அமைந்தவை. விநாயகருக்குத் துளசியும், சிவபெருமானுக்குத் தாழம்பூவும், உமாதேவியாருக்கு அறுகும் நெல்லும், வைரவருக்கு நந்தியாவர்த்தமும், சூரியனுக்கு வில்வமும், விஷ்ணுவுக்கு அக்ஷதையும், பிராமணருக்குத் தும்பையும் ஆகாதனவாம். திங்கட் கிழமை சதுர்த்தி, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி அமாவாசி, பௌர்ணி, மாசப்பிறப்பு என்னும் இக்காலங்களில் வில்வமெடுக்கலாகாது. ஆதலின் இவையலாத ஏனைய காலங்களில் வில்வத்தை எடுத்து வைத்துக் கொள்ளலாகும். வில்வமரத்தைச் சிவமாகப் பாவித்து நாடோறும் பிரதக்ஷிண வழிபாடு செய்பவர் பாவத்தினின்றும் நீங்குவர். அந்தியகாலத்தில் வில்வத்தடிமண்ணை உடம்பிற் பூசினோர் சிவபுரத்தடைவர். வில்வபத்திரம் சிவபெருமானுடைய இச்சா ஞானக்கிரியை வடிவமாதலின் இதழ் பிரித்தலாகாது. பூக்களினும் தாமரையைத் தவிர்ந்த ஏனைய பூக்களை இதழ் பிரித்து மாலைதொடுத்தல் அர்ச்சித்தல் பாவமாம். ஞாயிறு திங்கள் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளிலும் திருவோண நக்ஷத்திரத்திலும், சத்தமி, அட்டமி, துவாதசி, சதுர்த்தசி, அமாவாசி, பௌணர்மி திதிகளிலும், வியதிபாத யோகத்திலும், மாசப்பிறப்பிலும், காலை, மாலை இராத்திரிகளிலும் துளசியெடுக்கலாகாது. ஏனைய காலங்களில் எடுத்து வைத்துக்கொள்க. இரண்டிலை கீழுள்ள துளசிக் கதிர் எப்போதும் எடுக்கலாம். வில்வமும் கொக்கிறகு மந்தாரையும் ஆறுமாதத்திற்கும், வெண்டுளசி ஒருவருஷத்திற்கும், தாமரைப்பூ ஏழு நாளிற்கும், அலரிப்பூ மூன்று நாளிற்கும் எடுத்து வைத்துச் சாத்தலாம். சந்தனமானது, தூயகல்லில் தூயசந்தனக் கட்டை கொண்டு தன்னால் இன்றேல் ஆசார சீலரான சைவரொருவரால் உரைக்கப்பட்டதாய் பனிநீர் குங்குமப்பூ கோரோசனை பச்சைக் கற்பூரம் புழுகு சவ்வாது கஸ்தூரி முதலிய சேர்த்துக் குழைத்துள்ளதுதான் உத்தமமாகும். அக்ஷதம் என்பது, உமிதவிடு நீங்கியதாய் உடையாததாய் தூயநீரிற் கழுவப்பட்டுள்ள முழுப் பச்சரிசியாம். திருமஞ்சனம், தூயகுடத்தில் நிரப்பி ஆசார சீலரோடு கொண்டுவரப்பட்ட சுத்தோதகமாகும்.

ஏனைய அபிஷேகத்திரவியங்களாவன

எண்ணெய்க்காப்பு, மாக்காப்பு, நெல்லிக்காப்பு, மஞ்சட்காப்பு, பஞ்சகௌவியம், இரசபஞ்சாமிர்தம், பலபஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, கருப்பஞ்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தம்பழச்சாறு, தமரத்தம் பழச்சாறு, ஆலஞ்சிப்பழச்சாறு, மாதுளம் பழச்சாறு, இளநீர், விபூதி, சந்தனக் குழம்பு, சங்கநீர் முதலியன. பஞ்சகௌவியமென்பது விதிப்படி கூட்டியமைக்கப்பட்ட பால் தயிர் நெய் கோசலம் கோமயம் இவற்றின் தொகுதியாம். இரசபஞ்சாமிர்தமென்பது விதிப்படி கூட்டியமைக்கப்பட்ட பால், தயிர், நெய், தேன், சர்க்கரை யென்பனவற்றின் தொகுதியாம். பலபஞ்சாமிர்தமென்பது, முற்கூறிய இரசபஞ்சாமிர்தத்தோடு கூட்டியமைத்த வாழைப்பழம் மாம்பழம் பலாப்பழம் என்பவற்றின் தொகுதியாம். நெய் அபிஷேகித்த பின் வெந்நீர் அபிஷேகிக்க. திருவொற்றுடை நிர்மலமான பிரம்பரமே சிறந்தது. பாத்தியத்திரவியமாவது:—வெண்கடுகு, இலாமிச்சம் வேர், சந்தனம், அறுகு என்னுமிந்நான்குஞ் சேர்ந்த நீராகும். அருக்கியத்திரவியமாவது:— பால், தருப்பை நுனி, அக்ஷதை, எள்ளு, யவைநெல், சப்பாநெல், வெண்கடுகு என்னு மேழுஞ்சேர்ந்த நீராகும். ஆசமனீயத் திரவியமாவது:—சாதிக்காய், கிராம்பு, ஏலம், பூலாங்கிழங்கு, சண்பகமொட்டு, பச்சைக் கற்பூரம் என்னுமிவ்வாறுஞ் சேர்ந்த நீராகும்.

நிவேதனங்களாவன:- சுத்தான்னம், சித்திரான்னவகைகள், நெய் காய்ச்சப்பால், தயிர், முப்பழம், தேங்காய்ச்சிறு, சர்க்கரை, கறியமுதுகள், அபூபவர்க்கங்கள், பானகம் என்பன. சித்திரான்னவகைகளாவன:- முற்கான்னம், குளான்னம், காயசான்னம், ஆமிலான்னம், ததியன்னம், சர்ஷபான்னம், மாஷான்னம், பாயசான்னம் என்பன. இவற்றோடு மத்வன்னம் கிருசரான்னம் என்பவற்றைச் சேர்த்தலுமுண்டு. பிறிதொன்றுங் கூட்டப்படாது தனிச்ச பாகம் பண்ணப்பட்டதுவே சுத்தான்னமாகும்; வேண்டிய அரிசியும் அதன் நாலுமடங்கு கொண்ட சிறுபயறும் தேங்காய்த் துருவலுங்கூட்டிப் பாகம் பண்ணப்பட்டது முற்கான்னமாம். இது பருப்புப் பொங்கலெனவும் வழங்கப்படும். அரிசியும் அதிற்பாதி கொண்ட பாலும், அவ்வளவு வெல்லமும், அதிற் பாதிகொண்ட நெய்யுஞ் சேர்த்தமைத்த குளான்னமாம். அரிசியும் மிளகுப்பொடியும் இலவணமும் நெய்யுஞ் சேர்த்து ஆக்கியது காயசான்னம் எனப்படும். அரிசியும், புளியும் இலவணமும் தாளிதமுஞ் சேர்த்துப் பக்குவப்படுத்தப்பட்டது ஆமிலான்னமாம். அரிசியும் தயிரும் இலவணமும் தாளிதமுஞ் சேர்த்துப் பாகஞ் செய்யப்பெற்றது ததியான்னமாம். அரிசியும் கடுகும் தேங்காயும் இலவணமும் எலுமிச்சம்பழ ரசமும் தாளிதமுஞ் சேர்த்து முறைப்படி பாகமானது சர்ஷபான்னமெனப்படுவது. அரிசி உழுத்தம்பருப்பு கடலைப் பருப்பு பயற்றம் பருப்பு இலவணம் தாளிதம் என்பவற்றாற் செய்யப்பட்டது மாஷான்னமாகும். அரிசியும், அதிற் பாதி பயற்றம் பருப்பும், அரிசியின் நான்மடங்காவது மும்மடங்காவது இருமடங்காவது கொண்ட பாலுங் கூட்டிப் பாகம் பண்ணப்பட்டது பாயசான்னம். தேன் வார்த்துப் பிசறிய அன்னம் மத்வன்னமாம். அன்னமும் அதன் காலிலொரு பங்கு எள்ளும் பொடியும் அதிற்பாதி நெய்யுமாகப் பிசறியது கிருசரான்னமாகும். அபூபவர்க்கங்கள் என்றது பணிகாரங்களை அவை, மோதகம், பிட்டு, அப்பம், வடை, தேன்குழல், அதிரசம், தோசை, இட்டலி முதலாயினவாம். பானகம் என்பது எலுமிச்சம்பழ ரசமும் வெல்லமுஞ் சேர்ந்த நீராம்.

பானீயமென்பது, ஏலம், சந்தனம் பச்சைக்கற்பூரம், பாதிரிப்பூ, செங்கழுநீர்ப்பூ இடப்பெற்ற சலமாம். தாம்பூலம் என்பது, வெற்றிலைபாக்கு, கற்பூரப்பொடி முகவாசம் என்பன சேர்ந்ததாகும். முகவாசமெனப்படுவது ஏலம் இலவங்கம் பச்சைக் கற்பூரம் சாதிக்காய் தக்கோலம் என்பவற்றின் பொடியைப் பனிநீரோடு கூட்டிச் செய்த குளிகையாகும். தசாங்கம் குங்கிலியம் சாம்பிராணி பசுநெய் என்பவற்றாலெழும் புகையே தூபமெனப்படும். தாமரை நூலிற் பசுநெய் கூட்டிப் பொருத்தப் பெற்ற தீச்சுடரே உத்தமமான தீபமாகும். ஏனைய கற்பூரத்திலாகிய சோதியே நீராஞ்சனமெனப்பட்டது. ஏனைய உபசாரப்பொருள்களாவன:- விபூதி கண்ணாடி, குடை, சாமரம், விசிறி, ஆலவட்டம் என்பன. இவ்வளவில் பூசைக்குரிய சாதனங்களை ஒருவாறு குறிப்பிட்டேம்.

தொடரும்

திருவதிகை வீரட்டானம்
திருநேரிசை

தெருளுமா தெருள மாட்டேன்
  தீவினைச் சுற்ற மென்னும்
பொருளுளே யழுந்தி நாளும்
  போவதோர் நெறியுங் காணேன்
இருளுமா மணிகண் டாநின்
  னிணையடி யிரண்டுங் காண்பான்
அருளுமா றருள வேண்டும்
  [illegible]திகைவீ ரட்ட னீரே.

அப்பர்சுவாமிகள்

அருணோதயம்

ரா. ஸ்ரீ தேசிகன் எம். ஏ.

(முற்றொடர்)

இவ் வீர மொழிகளைக் கேட்டு அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தனர். கண்கள் கண்களோடு கலந்தன. சபையும் கலைந்தது.

கன அந்தகாரம்; வேறு வெளிச்சமில்லை. மர இடுக்குகளின் வழியாய் நூலிழைபோல் நட்சத்திரங்களின் ஒளி உள்ளே நுழைகிறது. திக்குத் திசை தெரியாத காட்டில் உலாவிக் கொண்டு ஒருவர் போகிறார். இடுப்பில் துப்பாக்கியைச் சொருகியிருக்கிறார்; ஆனால் என்ன? மனத்திலோ ஒரு பெரும் பூசல்.

"அவன் நம்மைப்போல ஒரு மனிதன்தானே?"

"அவனைக்கொல்வானேன்?"

"விசாரிக்கப்போனால் யார் யாரைக் கொல்லுகிறார்கள்?"

"நாம் ஆத்மாவாயிற்றே!"

"ஆத்மாவானால் கஷ்டமேது சுகமேது?"

"யார் அரசாண்டால் என்ன?

"தர்மாதர்மம் இல்லையா? கொடுங்கோல் மன்னனை மாய்ப்பதுங்கூட நல்லதுதானே!"

"கொல்வதற்கு நீயா அதிகாரி?"

"பகவான் நம்மைக் கருவியாக வைத்துத் தன் காரியத்தைச் சாதிக்கிறான்"

"பகவான்தான் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியுமா? அகங்காரப்பேயின் பேச்சாகவும் அது இருக்கலாமே"

இப்படி ஓர் எண்ணம் மற்றோர் எண்ணத்தோடு போர்புரிந்தது. சத்தியானந்தர் தத்தளித்தார். கடைசியில் சாமுண்டேச்வரியைத் தியானித்தார்.

"அம்பிகே! என்மனம் நல்லதையே நாடுகிற விஷயம் நான் அறிவேன். நீயும் அறிவாய். துவேஷத்தினால் நான் இந்தக்காரியத்தில் இறங்கவில்லை. நீதான் எனக்குத் தைரியந்தரவேண்டும்."

இந்தப் போராட்டத்தில் சத்தியானந்தர் மெல்ல நடந்துபோனார். காவலுங் கட்டுமாயுள்ள அரசனுடைய அரண்மனைத் தோட்டத்தில் கள்ளத்தனமாய் நுழைந்தார். ஒரு பெரிய மரத்தடியில் துப்பாக்கியும் கையுமாய்ப் பதுங்கினார். மேல்விளைவை உன்னினார்.

அரண்மனை வெளிமாடத்தில அநேக விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. அரசன் சாதாரண உடை தரித்துக்கொண்டு ஓர் அழகிய நாற்காலியில் வீற்றிருக்கிறான். அவன் மனைவி அவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கிறாள். அரசனுடைய பிள்ளை வயிற்று மகன் அவனுடைய தாடியைப் பிடித்து இழுக்கிறான்.

இழுத்துக்கொண்டே "என் இன்னும் சிப்பாயைத் தாலே!" என்று கேட்கிறான்.

"அடே குசுருகான் குழந்தையின் பொம்மைச் சிப்பாய் எங்கே? சரி பண்ணியாச்சா?"

"ஆம்! ஆம் எஜமான்கொண்டுவரேனுங்க!"

வேலைக்காரன் பொம்மையை எடுத்துவருகிறான்.

'என் தாத்தா இந்தச் சிப்பாயோடே சண்டை தடிப்பையோ?"

"ஓ சண்டைபிடிப்பேன" என்று கைச்சட்டையை மடித்துக்கொள்ளுகிறான் அரசன். குழந்தையும் அப்படியே செய்கிறது. போரின் வீரத்தைக் கண்ட பாட்டி முகமலர்கிறாள்.

ஒரு ராக்ஷஸன் என்று எண்ணினேனே! இவனும் ஒரு குழந்தையாகிவிட்டானே என்று இதைக் கண்ட சத்தியானந்தர் எண்ணினார்; இதுதான் சமயம் சுடு என்று ஓர் ஒலி மனத்தில் எழுந்தது; அவர் உள்ளொலியைக் கவனிக்கவில்லை. நேரில் நிகழும் அன்பொழுகுகிற காட்சியில் அவர் மனம் அப்படியே தைத்துவிட்டது.

இந்த வெளி மச்சில் நாம் இருந்தால் ஆபத்து உள்ளேபோய் உட்காருவோமா? என்றான் அரசனின் மூத்த குமாரன்.

என்ன ஆபத்து வரப்போகிறது? பகவானில்லையா? எவ்வளவோ தரம் என்னைச் சுடப்பார்த்திருக்கிறார்கள். அவர்கள் முயற்சிகள் வீணாய்ப்போயின.

மற்றொரு பக்கத்தில் அரசனின் பெண்கள் பலவகைப் பழங்களைத் தின்றுகொண்டும் காதற்பேச்சுப் பேசிக்கொண்டும், தங்கள் கணவர்களோடும் பொழுது போக்கினார்கள். சிரிப்பும் விளையாட்டுமாகத்தான் இருந்தன.

இந்த அன்பு நிலயத்தை அழிக்கப்பார்த்தேனே. சீ! என்ன பேதைமை! என் குழந்தைகள் மாதிரியே தான் இவர்களும் இருக்கிறார்கள். அரசனின் தாடியைப்பார்த்தால் என் தகப்பனார் ஞாபகம் வருகிறது,

அநேக எண்ணங்கள் சத்தியானந்தர் மனத்தில் பொங்கி யெழுந்தன. அந்த இடத்தை விட்டகன்றார். காளிகோயிலில் செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றாததற்கு மரணம் நிச்சயம். அதைப்பற்றி அவருக்குக் கவலையில்லை. ஒரு ஹத்தியிலிருந்து பிழைத்த பெருவகையில் வாழ்க்கையாகப்போகிற கொடுந் துன்பம் மறைந்து விட்டது. போகிற வழியிலுள்ள கிணற்றில் இதோடு என்னைக் கொலைத்தொழிலில் தூண்டிய என் புலை எண்ணம் மறைக என்று தன் துப்பாக்கியை எறிந்தார். கன்பாகரின் சபைக்குச் சென்றார்.

"காரியம் ஆகிவிட்டதா? என்றான் ஒருவன் பரபரப்புடன்.

"இல்லை."

"இல்லை ?? எதனால்? சரியான சந்தர்ப்பம் வாய்க்கவில்லையா?"

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

வெள்ளப்பெருக்கும் அதன் விளைவுகளும்

நோய்கள் பரவாது தடுத்தல்

அரசாங்க வைத்திய சுகாதாரப் பகுதி வெளியீடு

வெள்ளப் பெருக்குகளின் விளைவாக ஏற்படுபவைகளில் வெள்ளம் பெருகின பகுதிகளில் வயிற்றுளைவும் நெருப்புக் காய்ச்சலும் போன்ற நோய்கள் தொற்றிப் பரவுவதும் ஒன்று. பொது சனங்கள் தகுமாகவே வேண்டிய முன் னெச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் இதை அதிகமாகக் குறைத்து விடலாம்.

வெள்ளப் பெருக்கு உள்ளகாலங்களிலெல்லாம் கிணறுகளை நன்றாக மருந்து நீரால் சுத்தஞ் செய்த பின்பு மாத்திரம் அக்கிணறுகளிலிருந்து தண்ணீரை எடுத்து உபயோகிக்க வேண்டும். என்றாலும், நீரை நன்றாகச் சுடவைத்த பின்பு உபயோகிப்பது தான் ஆபத்திற்கு இடந்தராது.

இலங்கையின் நாட்டுப் புறங்களில் முக்கியமாய்த் தண்ணீர் கிணறுகளிலிருந்தே எடுக்கப் படுகிறது. அவற்றில் அநேகமானவை அழுகலான சரியாய்க் கட்டப் படாதவையுமாயிருக்கின்றன. இக்கிணறுகள் கிலப்பரப்பின் கீழ் அழுக்கடைவதுடன், இலங்கையில் ஒவ்வொரு காலத்திற் பல பாகங்களிலும் ஏற்படும் வெள்ளப் பெருக்குகள் மூலம் மேற்பரப்புகளும் அழுக்கடைகின்றன. சாக்கடைகளால் வெளியாகும் நீர், அழுக்கு நீர், தொழிற்சாலைகளிலும் வர்த்தக சாலைகளிலும் இருந்து வெளியாகும் அழுக்கு நீர்கள்; அழுகின மாமிசங்களும் தாவரங்களுமெல்லாம் கிணற்றுக்குட் சென்று நீரை அசுத்தமாக்கிவிடுகின்றன. அப்போப்பட்ட நீரைச் சரியான முறையிற் சுத்தி செய்யாது உட்கொண்டால் கிராணி, வயிற்றுளைவு, நெருப்புக் காய்ச்சல் போன்ற குடல் சம்பந்தமான நோய்கள் உண்டாகும். இத்தருணங்களில், நீரை முழுப்படியும் வீட்டிற்குரிய முறையிற் சுத்தமாக்க வேண்டும். வடிகட்டின பின், நீரை கொதிக்க வைப்பதையே கைக்கொள்ள வேண்டும்.

கிணறுகளைச் சுத்தமாக்குவதற்கு "குளோரைட் ஒவ் லைம்" மூலம் சுத்தமாக்குவது நல்லது. 1000 கலன் நீருக்கு ஒரு அவுன்சு மருந்து விகிதம் கையான வேண்டும். இம்முயற்சியைப் பழகியவர்களின் மேற்பார்வையின் கீழ் செய்ய வேண்டுமாகையால், வெள்ளம் பெருகின பகுதிகளிலுள்ள கிணறுடையவர்கள் அப்பகுதியின் சுகாதார டாக்குத்தோருக்கு எழுதி அல்லது சுகாதாரத்தவருக்கு அறிவித்து அவர்களை வந்து கிணறுகளைச் சுத்தமாக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டும். அப்போப்பட்ட வேலையை அவ்வுத்தியோகஸ்தர்கள் மனப்பூர்வமாய்ச் செய்வார்கள். ஒருமுறை ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் உண்டான தீமைகளுடன் அப்பகுதியில் இன்னொரு வெள்ளப் பெருக்கு உண்டாகும். கிணறுகள் பின்னும் அழுக்கடையாவண்ணம் அங்குள்ளவர்கள் தமது கிணறுகளைத் திருத்திக் கட்டிக்கொள்ள வேண்டும்.

தெளிவான நீர் ஆபத்திற்கிடமில்லாத நீரென்பது அர்த்தமல்ல. ஆகையால், கொதிக்க வைக்காது ஒரு போதும் நீரை உட்கொள்ளலாகாது. ஒவ்வொருவரும் தனக்கும் தனது குடும்பத்தவர்களுக்கும் நெருப்புக் காய்ச்சல் தொற்றிக்கொள்ளாவண்ணம் மருந்து ஏற்றிக்கொள்ளுவதால் அந்நோய் தொற்றிப் பரவாவண்ணம் பாதுகாக்கலாம். இதை அவ்வப் பகுதியிலுள்ள சுகாதார டாக்குத்தோர் இலவசமாய்ச் செய்வாராகையால் பொது சனங்கள் தவறாது இவ்வகையாய்த் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுவார்களென எதிர்பார்க்கப் படுகிறது.

வெள்ளப் பெருக்குக் குறைந்து நீர் வற்றி வரும்போது அநேக மடுக்களும் நீர் நிலைகளும் ஆங்காங்கு காணப்படும். இவ்விதமான நீர் நிலைகளில் நுளம்பு செனித்துப் பெருகுவதால், அவை மலேரியாக் காய்ச்சலைப் பரப்ப ஏதுவாகின்றன. பொதுஜனங்கள் கல்லாவித நீர் நிலைகளை நிரப்பவும், குப்பைகளை அகற்றவும், நுளம்பு செனித்துப்பெருகும் இடங்களை அழிக்கவும் ஊர்க்கோற்றங்களுடன் ஒத்துழைத்தால் மேற்சொன்னவற்றை விலக்கி விடலாம்.

வெள்ளம் வற்றினபின் வாசஸ்தலங்களைச் சுற்றிலும் வெள்ளத்தில் மிதந்துவந்த பல பொருட்கள் தங்கியிருக்கும். இவற்றை அப்படியே விட்டுவிட்டால் அவற்றால் தீங்கு ஏற்படும். ஆகையால், வெள்ளம் வற்றினவுடன் ஒவ்வொரு வீட்டுக்காரரும் தமது வீட்டையுஞ் சுற்றுப்புறங்களையும் சுத்தஞ் செய்ய வேண்டியது அவசியம்.

யானை-கார் விபத்து

பாகன் காயமுற்றான்; கார் சேதமுற்றது

மொறட்டுவை, மே. 17உ.

இன்று காலை 3 மணியளவில் மஹெனுக்கலத்தைச் சந்திக்கருகே எழு தொன் எடையுள்ள ஒரு பெரிய வண்டி யானையால் இழுக்கப்பட்டு இராஜகிரியாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அப்போது காலியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒரு புதிய கார் வழுக்கி வண்டியின் பின்பாகத்தோடு மோதியது. பாகனுக்குக் காலிற் பலமான காயம் ஏற்பட்டது. கார் மிக்க சேதமடைந்தது. விபத்துக் காரணமாக, யானை பயமடைந்து அங்குமிங்கும் ஓடியது. செய்தி கிடைத்தும், பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று காயமுற்றவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். யானையைத் தேடிப் பிடிப்பதற்கு ஆட்கள் அனுப்பப்பட்டனர். காலை ஆறு மணியளவில் கதலானையைச் சேர்ந்த ஒரு தோட்டத்தில் யானை கண்டுபிடிக்கப்பட்டது.

ஏழாலையிற் சித்தாந்த வகுப்பு

ஏழாலையிலுள்ள திருஞானசம்பந்தர் மடத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் பிற்பகல் 4 மணியளவில் அநுஷானக்தசியம் என அழைக்கப்படும் ஸ்ரீமாந். ஐ. பொன்னையா அவர்களால் ஒரு சித்தாந்த வகுப்பு நடாத்தப்பெற்று வருகின்றது. பல பள்ளிக்கூட ஆசிரியர்களும் பிறரும் அவ்வகுப்பிற் சேர்ந்து சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த நூல்களைக் கற்று வருகின்றனர். விரும்புவோர் எவரும் அவ்வகுப்பிற் சேர்ந்து சித்தாந்த சாத்திரங்களைக் கற்றுக்கொள்ளலாம் என அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

மாதின் திடீர் மரணம்

மாரடைப்பே காரணம்

களுத்துறை மே 17—

கமகொடையில் தனது மருமகனுடன் இருந்துவந்த மஞ்சோஹாமி என்னும் மாது நேற்றுக் கொழுக்கிப்புழு வியாதிக்காக மருந்து வாங்கவும் புண்ணுக்குச் சிகிச்சை செய்யுமாறும் களுத்துறை ஆஸ்பத்திரிக்குச் சென்றார். அங்கு அவர் ஒரு வாங்கின்மீது உட்கார்ந்துகொண்டிருக்கையில், பிரக்ஞையற்று வீழ்ந்து உடனே மரணமடைந்தார். மரண விசாரணையின்போது காலஞ்சென்றவர் மாரடைப்பினால் மரணமடைந்துள்ளாரெனக் கூறப்பட்டது.

வாலிபனுக்கு மரணதண்டனை

திருக்கோணமலைக் கொலை வழக்கில் தீர்ப்பு

மட்டக்களப்பு, மே 16உ

சென்ற டிசம்பர் மாதம் 3-ந் திகதி திருக்கோணமலையைச் சேர்ந்த சைனாபேயில், திருக்கோணமலை வாசியான ஹெறவா லலங்கொடகே பெரிஸ் அப்பு என்பவரைக் கத்தியாற் குத்திக் கொலை செய்த குற்றத்திற்காக ஐயசிங்கே ஆராய்ச்சிகே திலகரத்ன என்னும் வாலிபர் மட்டக்களப்புச் சுப்பிறீம்கோட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்டார்.

அருணோதயம்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

"எனக்கு வாய்த்த சந்தர்ப்பம்மாதிரி ஒருவருக்கும் வாய்த்திராது. அரசனைக்கொல்வதாயிருந்தால் ஒமேகுதியாய்க்கொன்றிருப்பேன்; எனக்கு நேராகத்தான் இருந்தான்.',

ஏன் கொல்லவில்லை?

"அவன் நம்மைப்போல மனிதன் தானே?"

"மனிதனு? இரக்கமற்ற பேய் அவன்.

"பேர? ரொம்ப அன்னைக் கண்டேன், அவனிடத்தில் கடவுளிடத்தில் பத்தியிருக்கிறது.

"பக்தியா அவனுக்கு? என்று கோரமாய்ச் சிரித்தான் ஒருவன்.

மோசம்போனோமே இவனை நம்பி இவனைக்கொன்றால் என்ன? என்று ஒருவன் கத்தியை உருவினான்.

"அப்பொழுதே சொன்னேனே. இவனை நம் கூட்டத்தில் சேர்க்கக் கூடாதென்று. என் பேச்சைக் கேட்டீர்களா? என்று மண்டையில் அடித்துக்கொண்டான் எல்லோருக்கும் முதியவன் ஒருவன்.

"அவனைப் பிடித்துக் கட்டடா; ஒரு பேடியைப் போய்த் தலைவனாக வரித்தோமே என்ன மடமை!"

"கட்டுவானேன்? நானே போய் நின்று விடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே காளி கோயிலுக்கு எதிரே மண்டிபோட்டுக் கை கூப்பினார் சத்தியானந்தர்.

அவனை ஓசமல் பார்த்துக்கொள் என்றான் ஒருவன் மற்றொருவனைப் பார்த்து.

கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. என்ன செய்வதென்று அவர்களுக்கு நிதானப்படவில்லை. ஒருவன் அவனை ஏன் கொல்லவேணும் ? சாது அவன் என்றான்.

"சாது இவனைப்போல ஆண்டு சாதுகிடைத்தால் நாம் சாகவேண்டியதுதான்."

அவர்கள் கூடிக் கூடிப்பேசினார்கள். இரவு விரைவாய்த் தேய்ந்துகொண்டே போயிற்று.

அவனை விட்டோமானால் ஆபோகதிதான். அவன் நமக்குக் காலன் போல் தோன்றியிருக்கிறான். அக்கனலை அவிக்காமல் போனால் அது நம்மைச் சுட்டு நீறாக்கிவிடும்,"

ஆமாம் அது உண்மையே என்று அனைவரும் தலைகளை அசைத்தனர்.

அவர்கள் சிந்தையில் ஆழ்ந்திருக்கும் சமயம் அவரும் தம் மனக் கடலில் ஆழ்ந்துவிட்டார். அதில் பல அலைகள் எழுந்தன. குழந்தைகள் மனைவி தாய் தகப்பன் இவர்களுடைய ஞாபகங்கள் வந்தன. அவர்களை அநாதைகளாக விட்டு விட்டுப் போனேனே என்றெண்ணுந்தோறும் "அம்பிகே, எல்லாம் உன் செயல் அல்லவோ? நீதான் அவர்களை உன் அருள் விழியோடு நோக்கவேண்டும். இரத்த வெறி பிடித்த அலையும் இந்த வாலிபர்களின் மனங்களில் அன்பூற்றுகள் எழும்படி செய்வாய் என்று பலபடியாகப் பிரார்த்தனை செய்தார். கோரமான காளி முகத்திலும் ஒரு முறுவல் பூக்கக் கண்டார். தம் உதட்டிலும் ஒரு நகைபடுவது கண்டார். உள்ளத்திலும் சாந்தி பிறந்தது.

கொஞ்சங்கூடச் சஞ்சலமில்லாத அவருடைய சாந்த முகத்தைக் கண்டவன் கையிலகூட வாள் ஆட ஆரம்பித்தது. பிடித்து நின்றான்.

நீங்கள் தான் சண்டைபிடிக்கிற சிப்பாய்கள். நீ கத்தியைக் கொடு என்று எழுந்தான் ஒரு தீரன்.

தயாராயிரு இஷ்ட தேவதையைப் பிரார்த்தனை செய்துகொள் என்றான் அவனும். அனுதினமும் அவர் பிரார்த்தனைக் கென்று தம் அறைச் சுவரில் வரைந்த ஒரு பாட்டு அவர் செவியில் கலகலவென்று விழுந்தது.

"குடிக்கக் குருதி போதும் அம்மே
அடியார் படுதுயர் அகற்றுவாய்
அம்மே
குன்னிலரு பகைமேயல் பரிவுடன்
அணிக்க
அள்ளி அருள்வாய் அன்புக் கவச
மே

"சிந்திக்கிற என் இரத்தத்துடன் பழைய உலகம் மறையட்டும். அதோ அருணோதயமாகிவிட்டது. வாழ்வின் மேல் ஒரு விடியற்காலை; ஒரு புதிய உலகத் தோற்றம். பிறவி வேண்டேன் பிறப்பதாயிருந்தால் தீன தயாளு சிசுமம்பட்டுக் கட்டிவரும் அன்புக்கோயிலுக்குச் செங்கல் தூக்கிவரும் ஒரு தொண்டனாக என்னைப் பணிகொள்வாய் அம்மே! என்ற பிரார்த்தனை அவர் மனதில் எழுந்தது.

நண்பர்களே! போய்வருகிறேன்; விடைதரவேண்டும் என்று கைகூப்பினார் சத்தியானந்தர். கழுத்தில் கத்தி விழுந்தது. இரத்தம் பீறிட்டு புல்லின்மீது ஓடியது; காலையும் வந்தது.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு கரு. சித. சிதம்பரஞ் செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

நம்.	தீ.	ந.	ச.	ஊர்	பேர்	நகை விபரம்
1937 அக்டோபர்						
1634	5	29		சீர்வேலி	ச. சுந்தையா	இமி சிகப்புக் கல் தோடு சோடி 1 வெள்ளைக்கல் தோடு சோடி 1
டிசம்பர்						
2103	15	57		கோக்குவில்	க. அப்புத்துரை	அர்சுக்காப்புச்சோடி 1
1938 ஜனவரி						
2209	1	11		சித்தங்கேணி	கா. கந்தையா	இமி கல் மோதிரம் 1 மேற்படிகல் பொத்தான் 1
2221	4	40		கன்னதிட்டி	த. அப்பையா	வயிரச் சன்னம் 1 சிகப்புக் கட்டிய தோடு சோடி 1 கொக்கியில்லாத சங்கிலி 1
2241	6	40		கோண்டாவில்	சி. விசுவலிங்கம்	இமி கல் தாயித்து 1 மேற்படி கல் மோதிரம் 1 துண்டு தடை 8
2249	8	50		புன்னாலைக்கட்டுவன்	வி. நாகலிங்கம்	சேடிவேலை செய்த புலிப்பல் 1 மேற்படி நகம் 1
2273	12	38		வண்கிழக்கு	த. சி. வாளாசன்	வளையல் காப்பு சோடி 1
2298	15	15		கோண்டாவில்	சி. விசுவலிங்கம்	கிளாவர் மோதிரம் 1
2342	21	40		சங்கானை	மு. விசுவலிங்கம்	தாலி 1 துண்டு 2 டிப்பியில்லாத இமி கல் பதக்கம் 1
2345	21	112		வண்கிழக்கு	சி. பாலசிங்கம்	கோதுக் கொடி 1
2354	23	8		வயாவிளான்	ஆ. கந்தையா	சிறு அர்சாக் கூடு 1
2369	26	65		உடுவில்	வ. தம்பையா	அர்சுக்காப்பு சோடி 1
2370	26	90		வண்கிழக்கு	சி. பாலசிங்கம்	இமி வெள்ளைக்கல் பெண்டனுடன் சங்கிலி அட்டியல் 1 மேற்படி கல் தோடு சோடி 1 கிளாவர் மோதிரம் 1
2371	26	15		வண்மேற்கு	க. சோலைமலை ஆசாரி	டிப்பியில்லாத இமிகல் பதக்கம் 1
2391	29	75		மண்கும்பான்	சி. நடராசா	சங்கிலி 1
2400	30	300		தட்டாதெரு	சி. ஐயாத்துரை	வயிரச்சன்னம் 3 கட்டிய மோதிரம் 1 வயிரச்சன்னம் 2 சிகப்புக்கல் 1 கட்டிய மோதிரம் 1
2403	31	45		உடுவில்	வ. தம்பையா	இமிக்கல் புறேச்சு 1 விலாசம்போட்ட மோதிரம் 1
பெப்ருவரி						
2427	2	140		நல்லூர்	தி. ஜேசிங்கம்	இமிகல் முகப்புடன் கெட்டிக் கொலிசு சோடி 1
2429	2	20		வண்கிழக்கு	சி. பாலசிங்கம்	இள. நாட்டுக் கடுக்கன் சோடி 1 கல் வாளி சோடி 1
2440	4	365		தட்டாதெரு	சி. ஐயாத்துரை	முழு டலர் கோர்த்த சங்கிலி 1 இமி பச்சைக்கல் மோதிரம் 1 சிகப்புக்கல் மோதிரம் 2 பழுது வயிரச்சன்ன மோன்று கட்டிய மோதிரம் 1 பொடிக்கூடு 1 இமிகல் பதக்கம் 1
2457	5	40		புன்னாலைக் கட்டுவன்	வி. நாகலிங்கம்	துண்டுவைத்த கோட்டை அரைப்பவுண் 2 துண்டு தடை 4
2470	7	45		திருநெல்வேலி	வே. இராசையா	மிளகுகாப்பு சோடி 1
2474	7	20	50	கோப்பாய்	தி. பொன்னம்பலம்	ஒன்றுக்குத் திருகில்லாத இமி சிகப்புக்கல் தோடு சோடி 1 மேற்படி சிறுதோடு சோடி 1
2510	12	15		வண்கிழக்கு	க. சோலைமலையாசாரி	மருக்கன்காதோலைசோடி 1
2530	14	145		இணுவில்	வ. சின்னையா	இமிகல் முகப்புடன் அர்சுக்காப்பு சோடி 1
2538	15	195		நல்லூர்	தி. செந்தினம்	துண்டு இரண்டுடன் சாட்டுக்கொடி 1
2557	19	190		கோக்குவில்	க. சின்னத்துரை	தாலிச்சங்கிலிக்கொடி 1
2562	20	80		அச்சுவேலி	சி. நாகமணி	திருகில்லாத டைமன் அட்டியல் 1
2567	21	100		தட்டாதெரு	சி. ஐயாத்துரை	வயிரச்சன்னம் 9 கட்டிய மோதிரம் 1 பச்சைக்கல் மோதிரம் 1 இமிகல் மோதிரம் 2
2580	23	21		வண்மேற்கு	சி. கனகசபாபதி	இமி வெள்ளைக்கல் சிலேட் 1
2612	27	16		வண்கிழக்கு	க. சோலைமலையாசாரி	இமி சிகப்புக்கல் காதோலை சோடி 1
2616	28	10		கோப்பாய்	சி. கங்காதரையர்	சல்வாளிசோடி 1
2618	28	40		சீர்வேலி	வ. பொன்னையா	மருக்கன்கல் காதோலை சோடி 1 திருகில்லாத தோடு சோடி 1 கொப்பு சோடி 1
2621	28	80		வண்கிழக்கு	சி. வாளாசன்	மிளகுகாப்பு சோடி 1
2623	28	15		வண்கிழக்கு	க. சோலைமலைஆசாரி	இமி சிகப்புக்கல் தோடு சோடி 1
மார்ச்சு						
2632	2	140		ஆனைப்பந்தியடி	த. அன்னபூரணி	வயிரச்சன்னம் 7 கட்டிய தோடு சோடி 1
2637	2	20		தெல்லிப்பழை	ப. பால்ப்பாண்டியர்	இமிகல் செட் 1
2643	3	50		இணுவில்	வி. நந்திராபதி	பின்னைக்காப்பு சோடி 1 பெட்டி மோதிரம் 1
2656	5	30		வண்மேற்கு	சி. கனகசபாபதி	அரைமூடி 1
2666	7	60		வண்கிழக்கு	நா. அம்பலவாணர்	சாதா சேடிவேலைசெய்த காலடலர் கோர்த்த சங்கிலி 1
2679	9	80		வண்மேற்கு	சி. கனகசபாபதி	கைச்சங்கிலி 1 சிறு தாயித்து 2 பொட்டு 4
2682	9	300		பரங்கித்தெரு	ப. யோன் பிள்ளை	இமிகல் பதக்கத்துடன் கெட்டிப்பூரான் அட்டியல் 1 அவல்மாலை 1
2701	12	8		கந்தர்மடம்	நா. கந்தையா	சிகப்புக்கல் தோடு சோடி 1
2724	16	195		வட்டுக்கோட்டை	ம. சோமசுந்தரம்	இரண்டுபட்டுச் துண்டுச் சங்கிலி 1 விலாசம்போட்ட பெட்டி மோதிரம் 1 ஓவல்கல் பெண்டன் 1 இமி கல் மோதிரம் 1
2744	19	19		பெருமாள்கோவிலடி	நா. பெருமாள் செட்டி	இமிஒப்பறைக்கல் கடுக்கன் சோடி 1
2748	19	17		வட்டுக்கோட்டை	சு. மாணிக்கம்	டிப்பியில்லாதஇமிகல்பதக்கம்1
2814	28	6		கோண்டாவில்	சு. செல்லராசா	இமிசிகப்புக்கல்தோடு சோடி1

விற்பனவு நிகழும் பிரமாதி வருஷம் வைகாசி மாதம் 22-ந் திகதி (5-6-39) திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபடாத நகை பிரதிநிதிகளால் மீதி மேற்படியார் கடையிற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்
வெந்திஸ்மேஸ்தர்

Mis 38 18 & 22-5-39

தி மலாயன்
டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச் சாமான்கள் சீமேந்து வகைகள்
விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்,
"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y 275. 4-3-38 to 3-3-39

இலங்கையில் இந்தியர் குடியேற்றத்திற்குத் தடை

சமீபத்தில் அரசாங்கசபையில் சட்டம் கொண்டுவரப்படலாம்

எல்லா மந்திரிகளும் தங்களுக்குக் கீழுள்ள இலாகாக்களில் வேலை பார்க்கும் இலங்கையரல்லாத தொழிலாளர்களை வேலையினின்றும் நீக்கிவிட உடனே நடவடிக்கைகள் எடுக்கப் போவதாகத் தெரிகிறது.

மந்திரி சபைக்குப் போக்குவரத்து மந்திரியால் அரசாங்கத் தினசரிச் சம்பளத் தொழிலாளர் சம்பந்தமாய்ச் சமர்ப்பிக்கப்பட்ட பகஜரில் குறிப்பிட்ட முறைகளை அனுசரித்து ஒவ்வொரு மந்திரியும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நேற்று முன்தினம் தேசாதிபதிக்கும் மந்திரிசபைக்கும் தேசாதிபதி மாளிகையில் நடைபெற்ற மந்திராலோசனையில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

மந்திரிகள் குறித்த விஷயம் பற்றி நடவடிக்கைகள் எடுக்கையில், இலங்கையில் அந்நியநாட்டினரின் குடியேற்றத்தைத் தடை செய்வதற்கு அரசாங்கசபையில் ஒருசட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இமிகிரேஷன் சம்பந்தமாய் சேர். எட்வட் ஜாக்சனின் சிபார்சுகளைப் பற்றித் தொழில்நிர்வாகக் கொமிற்றி விசாரிக்கையில் இனி இலங்கையில் அந்நியர் குடியேறுவதைக் கட்டுப்படுத்துவதற்குள்ள சட்டத்தை ஏற்படுத்தும் ஆலோசனை கிளம்பிற்று.

அனுமதியின் பேரில் வரும் உல்லாச யாத்திரிகர்கள் விசேஷ காரியங்களுக்காகக் கொண்டு வரப்படுபவர்கள் ஆகியோரைத் தவிர மற்றைய அந்நியநாட்டினர் இலங்கையிற் குடியேறுவது தடைசெய்யப்படவேண்டுமெனத் தொழில் நிர்வாகக் கொமிற்றி அப்பொழுது சிபார்சு செய்தது.

மந்திரிசபை தொழில் நிர்வாகக் கொமிற்றி சிபார்சுகளை ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால், அந்நிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வர விரும்புபவர்கள் இலங்கையில் 3 மாதங்களுக்குக் கூடுதலாகத் தங்காமலிருந்தால் அல்லது இங்கு உத்தியோகம் ஏற்றுக்கொள்ளாமலிருந்தால் அல்லது ஏதேனும் ஒரு தொழிலை ஆரம்பிக்காமல் இருந்தால் ஒரு விசேஷ அனுமதியின்றி ஒரு ஜீவியத் தொழிலை ஏற்படுத்தாமலிருந்தால் இலங்கைக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டுமென மந்திரிசபை முடிவு செய்தது.

ஆகவே, இந்த நிபந்தனைகளின்படி ஒரு பிரயாணி 3 மாதங்களுக்குக் கூடுதலாக இலங்கையில் தங்கியிருக்க விரும்பினால், அவர் அதற்காக விசேஷ அனுமதி பெறவேண்டியிருந்திருக்கும். அரசாங்கத்தால் அந்நிய நாடுகளிலிருந்து தெரிந்தெடுக்கப்படும் உத்தியோகஸ்தர்களை இவ்விதிகள் கட்டுப்படுத்தாது.

தனிப்பட்ட ஸ்தாபனங்கள்

இந்தப் புதியசட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டால் எல்லாத் தொழில் ஸ்தாபனங்களும் உட்பட உத்தியோகப் பற்றற்றவர்கள் தங்கள் சிப்பந்திகளில் 4ல் 3 பங்கினரை இலங்கையரை வேலைக்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தமேற்படும்.

தோட்டத் தொழிலாளர் நிலைமை இப்பொழுதுள்ளது போலவேஇருந்து வரும்.

மேற்கூறியமுறைகளை அனுசரித்துச் சட்டம் சமீபத்தில் அரசாங்கசபையிற் கொண்டுவரப்படுமெனத் தெரிகிறது.

புதிய றப்பர்க் கோட்டா

அடுத்த கால்வருடத்துக்கு
55 சதவிகிதம்

கையிருப்புச் சரக்கு

அமெரிக்கா 50, 165 தொன்கள் வாங்கியது

ரக்பி மே 16—

சர்வதேச றப்பர்க் கட்டுப்பாட்டுக் கொமற்றி இன்று கூடி இவ்வாண்டு ஜூலை ஆகஸ்டு செப்டம்பர் மாதங்களுக்கு, அடிப்படைக்கோட்டாவில் 55 சதவிகிதம் ஏற்றுமதிசெய்யலாம் என்று தீர்மானித்தது. அடுத்த கூட்டம் ஜூலை 25ந் தேதியன்றாகும். (பி-ஆ-த)

எனவே, குறித்த கால் வருஷத்திற்கு இலங்கை 14 575 தொன்கள் றப்பர் ஏற்றுமதி செய்யலாம்.

நேற்று றப்பர் விலை 1/8 பென்னியாக உயர்ந்தது.

உலகின் கையிருப்புச் சரக்கானது சென்ற ஆண்டு நடுவிலிருந்து குறைய ஆரம்பித்தது.

சென்ற ஆண்டு இருந்ததைக்காட்டிலும், இவ்வாண்டு மார்ச் மாத இறுதியில் 123, 500 தொன் கையிருப்பு றப்பர்ச்சரக்குக் குறைந்திருக்கிறது.

ஜனவரிமாதத்திலேராளமாக அனுப்புதல் ஏற்பட்டதன் பேரில் கையிருப்புச் சரக்கு 18,000 தொனகள் தான் குறைவைக்காட்டின.

உலகின் கையிருப்புச் சரக்கு நிலைமையானது பின்வரும் புள்ளி விபரங்கள்மூலம் தெளிவாகின்றது

மாதம்	தொன்கள்
டிசம்பர் 1938	456 , 645
ஜனவரி 1939	472 , 056
பிப்ரவரி 1939	460 , 507
மார்ச் 1939	438 , 189

50, 65 தொன்கள்

ஏப்ரல் மாதத்தைப்பற்றிய புள்ளிவிபரங்கள் கிடைக்கவில்லை. ஆனால், இம்மாதம் ராஜ்ய நெருக்கடியுடன் காணப்பட்டதால், அதிக கையிருப்புச்சரக்கு வைக்கப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில், கப்பல்களில் அனுப்புதல் சரக்கு அதிகமாகவிருந்தது. வியாபாரிகள் கையில் சரக்கு வைத்துக்கொள்ள விரும்பினார்கள்.

எதிர்பார்த்ததைவிட அதிகச்சரக்கு அமெரிக்காவால் எடுத்துக் கொள்ளப்பட்டது. மார்ச் மாதம் இச்சரக்கு 50,165 தொன்களாகும். ஜூன் 1937 க்குப்பிறகு எம்மாதத்திலும் இவ்வளவு அதிகப்படியான சரக்கு எடுக்கப்பட்டதே கிடையாது.

1939-ம் ஆண்டு முதல் இரண்டு மாதங்களில் அமெரிக்காவால் எடுத்துக் கொள்ளப்பட்ட சரக்கு சராசரியாக 41,000 தொன்களாகும்.

றெயில் விபத்து நடந்த ஸ்தலத்தில் நீதிபதி

என்ஜின் டிரைவர் வழக்கு விசாரணை

மே 19—

நேற்று முன்தினம் மாலை கரையோரப்பகுதியில் ஒரு கோச்சிகள் நிறுத்தப்பட வேண்டி ஏற்பட்டது. இதற்குக் காரணம் எல் ஓ டொன் எனும் ஓர் றெயில்வேச் சாரதி கவலையீனமாகக் கோச்சியை ஓட்டி ஒருவருக்கு மரணத்தை விளைவித்தாரென்ற தற்போது குற்றவிசாரணைக் கோட்டில் நடக்கும் விசாரணை சம்பந்தமாக நீதிபதியும், ஜூரர்களும் மருதானைக்கும் கொழும்புக் கோட்டைக்குமிடையே உள்ள றெயில்வே சமிக்ஞைகளைப் பார்வையிடச் சென்றதேயாகும். விசாரணையின் போது எழுப்பிய பலவித பிரச்னைகளும், நீதிபதியினாலும் ஜூரர்களினாலும் பரிசோதனை செய்யப்பட்டுப் பார்க்கப்பட்டன.

நேற்று வழக்குத் தொடர்ந்து விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டபோது, மிஸ்டர் ஜே. ஜி. ஸ்மித் மீண்டும் விசாரணை செய்யப்பட்டார்.

ஆகாயவசனி அறிக்கைகள்

மதராஸ் 1

வியு எம் 211 மீட்டர்கள்(வி/1420 கி சை)

மே 23 செவ்வாய்

மாலை
5 00 ஸ்ரீ கே. வெங்கடசுப்ப அவதானி வாய்ப்பாட்டு
5 45 ஸ்ரீமதி வி. எஸ். ராஜமும் அ இ ரே வாத்திய கோஷ்டியும் தக்கடாக்கள்
6 00 ஸ்ரீமான் ஆர். பி. அய்யர் வாய்ப்பாட்டு
6 30 ஸ்ரீ கே. வெங்கட அவதானி வாய்ப்பாட்டு
7 00 அகில இந்திய ரேடியோ நாடக மேடை "தோற்றமும் ஏமாற்றமும்" தமிழ் ஹாஸ்ய நாடகம்
7 15 "மகனும் தந்தையும்" தெலுங்குப் பேச்சு ஸ்ரீ கே. ராமகோபால ராவ்
7 30 காயக சிகாமணி ஸ்ரீ எல். முத்தையா பாகவதர் வாய்ப்பாட்டு
8 15 அ இ ரே வாத்தியக்கோஷ்டி
8 20 காயகசிகாமணி ஸ்ரீ எல். முத்தையா பாகவதர் வாய்ப்பாட்டு
8 55 "வர்ண விசித்திரம்" ஸ்ரீமதி சகுந்தலா தம்பிராபுடுபேசுவார்
9 10 வர்த்தமானமும் வானிலை அறிக்கையும்
9 25 உள்ளூர் வர்த்தமானமும் அறிக்கையும்
9 30 ஐரோப்பிய சங்கீதம்
10 30 முடிவு

மதராஸ் 2

60 98 மீட்டர்கள் (வி/4920 கி சை)

மாலை
5 00 ஸ்ரீ ஜி. வெங்கட்ராமன் வாய்ப்பாட்டு
6 00 'உத்தர கோகிரஹணம்' தெலுங்குக் கதை (ரிகார்டுகள்) ஸ்ரீதோத்தர்பு வெங்கடசாமி தேவரும் கோஷ்டியும்
6 35 நடப்புவிலை வாசியும் அறிக்கையும்
6 40—9 30 மதராஸ் 1ல் இருக்கிறபடி
9 30 ஸ்ரீ சி. காசிஅய்யர் புல்லாங்குழல்
10 30 முடிவு

திருச்சினாப்பள்ளி

வி யு ரி மீட்டர்கள் (வி/758 கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

பகல்
2 00 கிராமபோன் ரிகார்டுகள் கொலம்பியா வாத்தியக்கோஷ்டி கினாரியக
2 15 இருவர் இசைப்பாட்டுகள்
ஸ்ரீ டி. குர்வகுமாரியும்
ஸ்ரீமதி எஸ். பி. மதுரமும்
ஸ்ரீமதி வ. ஸ்வர்ணம்பாளும்
ஸ்ரீ வி. சங்கரலிங்கமும்
ஸ்ரீ கே. ஸ்ரீனிவாசனும்
ஸ்ரீமதி சங்கரும்
ஸ்ரீ ஸ்ரீனிவாசனும்
ஸ்ரீமதி வசந்தரா தேவியும்
2 45 மதராஸ் ஸ்ரீ நாதமுனி பாண்டு பங்களூர் யுனிவர்ஸிடி யூனியன் ஆர்க்கெஸ்ட்ரா
3 00 முடிவு

டிரான்ஸ்மிஷன் 2

6 00 கிராமவாசிகளுக்கு அ இ ரே பாடகர் "விதைவிதைத்தல்" தமிழ்ப் பேச்சு அ இ ரே பாடகர் நடப்புவிலை வாசியும் அறிக்கையும்
6 30 திருவாலங்காடு ஸ்ரீ என். சுந்தரேசய்யர் பிடில்
7 00 "மாயாபூமி" தமிழ்ப்பேச்சு ராவ் சாகிப் வி. ராஜகோபால் பிள்ளை
7 15 ஸ்ரீ ஆர். நாராயணஸ்வாமி வாய்ப்பாட்டு (சிறீ செம்மங்குடி சிறீனிவாசய்யரின் சிஷ்யர்)
8 00 கிராமபோன் சங்கீதம் திருச்செந்தூர் ஷண்முக வடிவு
8 15 திருவாலங்காடு சிறீ என் சுந்தரேசய்யர் பிடில்
8 45 சிறீ ஆர். நாராயணஸ்வாமி வாய்ப்பாட்டு
9 15 வர்த்தமானமும் வானிலை அறிக்கையும்
9 30 முடிவு

மதராஸ் 1

வியு எம் 211 மீட்டர்கள்(வி/1420 கி சை)

மே 24 புதன்

மாலை
5 00 சாச்சபுடி சிறீ ஸீதாபதிராவ் வாய்ப்பாட்டு
5 45 அ இ ரே வாத்தியக் கோஷ்டி
6 00 சிறீமதி மரகதமும் சிறீமதி ராஜமும் வாய்ப்பாட்டு
6 45 கண்டனூர் சிறீ பங்காரு அய்யர் வாய்ப்பாட்டு
7 15 அடுத்த படிக்கட்டு 3 பேசும்படம் ஸ்ரீ ஜி. கே. சேஷகிரி தமிழில் பேசுவார்
7 30 சிறீ வாலாடி கிருஷ்ணய்யர் வாய்ப்பாட்டு
8 10 அ இ ரே வாத்தியக்கோஷ்டி
8 20 சிறீ வாலாடி கிருஷ்ணய்யர் வாய்ப்பாட்டு
8 55 பட்டணம்பார் கோபுரங்கள் சிறீ. எஸ். வி. வெங்கடேஸ்வரர் பேசுவார்
9 10 கிராமபோன் ரிகார்டுகள்
9 15 வர்த்தமானமும் வானிலை அறிக்கையும்
9 20 உள்ளூர் வர்த்தமானமும் அறிக்கையும்
9 35 மணி செய்வோன் தயாரித்தது பீட்டர்டான்
9 50 சிறீ பி. வெங்கடாசலம் பிடில்
10 30 முடிவு

மதராஸ் 2

60 98 மீட்டர்கள் (வி/4920 கி சை)

மாலை
5 00 சிறீமதி எஸ் தேவகி அம்மாள் வாய்ப்பாட்டு
6 0) மதராஸ் 1ல் இருக்கிறபடி
9 50 ஐரோப்பிய சங்கீதம்
10 30 முடிவு

திருச்சினாப்பள்ளி

வி யு தி 395 8 மீட்டர்கள்(வி/758கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

பகல்
2 00 கிராமபோன் ரிகார்டுகள் செம்பை சிறீ வைத்யநாத பாகவதர் வாய்ப்பாட்டு சிறீமதி தனம்மாள் வீணை சிறீ சித்தூர் சுப்பிரமணியபிள்ளை வாய்ப்பாட்டு புதுக் கோட்டை சிறீ நாராயணசாமிஐயர் பிடில்
3 (0 முடிவு

டிரான்ஸ்மிஷன் 2

6 00 கிராமாந்திரத்திற்கு அ இ ரே பாடகர் "நாற்றங்கால் தயாரித்தல்" தமிழ்ப் பேச்சு அ இ ரே பாடகர் நடப்புவிலை வாசியும் அறிக்கையும்
6 30 தேசமங்கலம் சிறீ சுப்பிரமணிய ஐயர் வீணை
7 00 "வயதானவருக்கு அ ஆ' தமிழ்ப் பேச்சு சிறீ கே. ஜி. சிவசாமி
7 15 'சிறீ கிருஷ்ண துலாபாரம்" தமிழ் நாடகம் தயாரித்தவர் சிறீ வி. வெங்கட்ராமன்
8 00 பழையஞாபகம் ரிகார்டுகள் சிறீமதி பங்களூர் நாகரத்தினம்மாள் சிறீமதி கோயம்புத்தூர் தாய்
8 15 தேசமங்கலம் சிறீ சுப்பிரமணிய அய்யர் வீணை
9 15 வர்த்தமானமும் வானிலை அறிக்கையும்
9 30 முடிவு

மதராஸ் 1

வி யு எம் 211மீட்டர்கள்(வி/1420கி சை)

மே 25 வியாழன்

மாலை
5 00 காரைக்குடி சகோதரிகள் வாய்ப்பாட்டு
5 30 சிறீ பி. ஆர். சிறீபதி வாய்ப்பாட்டு
6 00 காரைக்குடி சகோதரிகள் வாய்ப்பாட்டு
6 20 "ஒவ்வொருவீட்டிலும் நடப்பது" மலையாளத்தில் ஓர் நாடகநிகழ்ச்சி
6 40 அ இ ரே வாத்தியக்கோஷ்டி
6 45 சிறீமதி தர்காபாய் வாய்ப்பாட்டு
7 5 "ஆரோக்கியமான தேசங்கள்" தெலுங்குப் பேச்சு சிறீ பலகோடேறி வெங்கட கிருஷ்ணராவ்
7 30 சிறீ செம்பை வைத்யநாதபாகவதர் வாய்ப்பாட்டு
8 55 பொதுஜனங்களின்மனப்பான்மை "கலகம் செய்பவனின் போக்கு' சிறீ W ஆதிசேஷய்யா
9 10 கிராமபோன் ரிகார்டுகள்
9 15 வர்த்தமானமும் வானிலை அறிக்கையும்
9 35 ஐரோப்பிய சங்கீதம்
10 30 முடிவு

மதராஸ் 2

60 98 மீட்டர்கள் (வி/4920 கி சை)

மாலை
5 00 மதராஸ் 1ல் இருக்கிறபடி
6 00 சிறீமதி கமலா சத்தியா கீதம்
6 05 நடப்புவிலை வாசியும் அறிக்கையும் தெலுங்கு
6 10 "யாதவருக்குள்" தெலுங்கு நிகழ்ச்சி
6 20 சிறீ எ. சேஷகிரிராவ் தெலுங்கு பக்திரசப்பாட்டு
6 25 "கூட்டுறவு மனப்பான்மை தெலுங்குப்பேச்சு
6 35 சிறீமதி கமலாவும் சிறீ எ. சேஷகிரிராவும்
6 45 மதராஸ் 1ல் இருக்கிறபடி
9 35 சிறீ எ. சாமண்ணு வீணை
10 20 முடிவு

திருச்சினாப்பள்ளி

வி யு தி 395.8 மீட்டர்கள்(வி/758கி சை)

டிரான்ஸ்மிஷன் 1

பகல்
2 00 கிராமபோன் ரிகார்டுகள் வேணுகான சிகாமணி பல்லடம் சிறீ சஞ்சீவிராவ் புல்லாங்குழல்
2 15 பெண்கள் சங்கீதம் ரிகார்டுகள் சிறீமதி கே. பி. சுந்தராம்பாள் வாய்ப்பாட்டு சிறீமதி டி. கே. பட்டம்மாள் வாய்ப்பாட்டு சிறீமதி சரஸ்வதிபாய் வாய்ப்பாட்டு சிறீமதி ராஜீவி வாய்ப்பாட்டு
2 45 பிடில் ரிகார்டுகள் மதுரை சிறீ. ஆர். ராஜகோபாலநாயுடு புதுக்கோட்டை சிறீ நாராயணசாமி ஐயர்
3 00 முடிவு

டிரான்ஸ்மிஷன் 2

மாலை
6 00 கிராமாந்திரத்திற்கு அ இ ரே பாடகர் "சுற்றுகளைப் பிடுங்கி நடுதல்" தமிழ்ப் பேச்சு அ இ ரே பாடகர் நடப்புவிலை வாசியும் அறிக்கையும்
6 30 கும்பகோணம் சிறீ என். என். ராஜண்ணாபிள்ளை நாகஸ்வரம்
7 30 'சங்கத்தமிழ்" தமிழ்ப் பேச்சு சிறீ டி. ஜயம்பெருமாள் கோனார்
7 15 உமையாள்புரம் சிறீ ஜி கல்யாணராமய்யர் வாய்ப்பாட்டு
8 00 வாத்திய சங்கீதம் ரிகார்டுகள் சிறீமதிகள் காவேரிபாயும் சின்னுபாயும் வீணை மைசூர் சிறீ டி. சௌடையா பிடில்
8 15 கும்பகோணம் சிறீ என். என். ராஜண்ணாப்பிள்ளை நாகஸ்வரம்
8 45 உமையாள்புரம் சிறீ ஜி. கல்யாணராமய்யர் வாய்ப்பாட்டு
9 15 வர்த்தமானமும் வானிலை அறிக்கையும்
9 30 முடிவு

றெயில்வே ஸ்ரேஷனில் ராஜகுமாரர் கைது

மீரத் மே 14—

ஆப்கான் ராஜகுமாரர் சர்தார் அலிம்கான் இன்று மீரத் றெயில்வே ஸ்ரேஷனில் றெயிலேற முயலுகையிற் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். இவர் ஒரு ஆப்கன் பந்தோபஸ்துக் கைதியாவர். இவரை நிபந்தனையின்மேல் வெளியேவிட அதிகாரிகள் பிறப்பித்திருந்த உத்தரவை இவர் மீறியதாகச் சொல்லி இவரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

Notice of Sale of Land.

காணி விற்பனவுவிளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 13397ம் இலக்க வழக்கில் 1939ம் வருஷம் வைகாசிமாசம் 17ந் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1939ம் வருஷம் ஆனி மாசம் 24ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை குளத்திப்பறையன் வளவும் செகட்டித்திடலும் ஆண்டி சீமாவும் பரப்பு கில. இலா. 6. குளி 2½ வீடுகளும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு நடராசா இராசதுரையினுதனமும் கையொழுங்கை முகப்பும் வடக்கு சின்னத்துரை மகன் நாகரெத்தினத்தினதும் பொன்னர் முத்துக்குமாருவினதும் ஆதனம் மேற்கு பொன்னர் முத்துக்குமாருவினதும் மறுபேரினுதனங்களும் கோவில் வெளிவீதியும் நடராசா இராசதுரையினுதனமும், தெற்கு நடராசா இராசதுரையினுதனமும் தெற்கெல்லையில் இருக்கும் ஆதனத்துக்குப் போகவரப் பாதைக்காக விடப்பட்ட நிலமும் இதில் சொரியலாக பரப்பு கில. இல. 2¼யும் அதைச் சேர்ந்த வைகளும் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றுப்பங்கும் வழிவாய்க்காலும்.

வீ. செல்லத்துரை,
கொம்மிஷர்.

வண்ணார்பண்ணை கிழக்கு சுப்பையா கந்தையா வழக்காளி.

Vs

வண்ணார்பண்ணை மேற்கு காசிநாதர் கைம்பெண் நாகமுத்து எதிராளி

(Mis. 43. 22-5 39)

№ 834

ஆசிரியை தேவை

பண்ணாகம், மெய்கண்டான் பாடசாலைக்கு 1-6-39 தொடக்கம் ஆசிரிய தராதரப்பத்திரம் (Tamil Teachers Certificate) அல்லது தமிழ் S. S. C. பத்திரம் பெற்ற ஓர் ஆசிரியை தேவை. தையல், விட்டுப்பணி, வரைதல், சங்கீதம் என்பவற்றில் திறமையுடையோர் விசேடமாகக் கவனிக்கப்படுவர். விருப்பமுடையோர், 29-5-39க்கு முன் விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

இ. மாதவர்,
லோக்கல் மனேஜர்.

மெய்கண்டான் பாடசாலை,
பண்ணாகம், சுளிபுரம்.

(Mis. 44. 22-5—29-5-39)

தேவை

இலங்கையில் யாழ்ப்பாணம் பெரும்பிரிவை யொழிந்த ஏனைய ஊர்களிற்சென்று, இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்களின் கணக்கால் வரவேண்டிய கிரயப்பணத்தைச் சேர்த்தனுப்புவதற்கும் புதிய அபிமானிகளைச் சேர்த்தற்கும் இன்னும் பத்திரிகைகளுக்கு அனுகூலமான காரியங்கள் எவைகளோ அவைகளை வேண்டிய சமையங்களிற் செய்தற்குமாகத் திறமைவாய்ந்த பத்திரிகைப் பிரதிநிதியொருவர்தேவை. இவ்விஷயமாக அறியவேண்டிய விபரங்களை அவர் எம்மிடம் நேரில்அறிந்து கொள்ளலாகும். வருகிற யூன் மாசம் 10-ம்தேதி வரையில் இவ்விஷயமான விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

மனேச்சர்
இந்துசாதனம்.

வண்ணார்பண்ணை
இந்துசாதனாலயம்
22—5—39

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமாதி ஞு வைகாசிமீ ௪உ வியாழக்கிழமை

சீதன வழக்கம்

சீதனங் கொடுத்த லாகிய வழக்கம் அக்காலத்திலே மிகவும் நல்ல நோக்கத்தோடு பெற்றோர்களால் தம் பெண்பிள்ளைகட்குச் செய்யப்பட்டு வந்தது. பெற்றோர் தம் பெண்ணை ஒரு ஆடவன் கையில் ஒப்பிக்கும்போது வெறும் பெண்ணாகவிடாமல், அப்பெண்ணின் அந்தஸ்திற்குத் தக்கபடி ஆபரணம் வீட்டுக்குரிய பொருள்கள் நிலம் புலம் முதலியவைகளைச் சீதனமென்று சொல்லிக் கொடுத்தலாகிய இந்த வழக்கம் இந்நாட்டு மக்களுட் புராதனமாகவிருந்த தென்பதை எவரும் மறுத்தல்முடியாது. அப்பெண்ணை மணஞ் செய்யும் நாயகன் தன் தேட்டம் முதுசொம் என்னும் இப்பொருள்களைக் கொண்டு தன் குடும்பத்தைச் செவ்வனே நடத்தி வருதல் தமிழ்நாட்டு வழக்கமாயிருந்தது. இன்றியமையாச் சமையத்தில் தன் மனையாளின் பூரண அனுமதியோடு சீதனப் பொருளிலும் ஒருபாகத்தை எடுத்துச் செலவிடல் முக்கியும் இல்லாததல்ல. புருஷனுடைய முதுசொம் தேட்டம் ஆகிய பொருள்களும் மனைவியினுடைய சீதனப் பொருளும் அப் புருஷன் மனைவியைக் காட்டிலும் அவர்கள் பெற்ற பிள்ளைகட்கே பெரிதும் உபயோகப்படல் வேண்டுமென்பதே எங்கள் மூதாதையர் கொள்கையாக விருந்தது. ஆனல் அக்காலத்தில் நன்னோக்கத்துடன் செய்யப் பட்டு வந்த இந்தச் சீதன வழக்கம் காலகதியில் விபரீதப்பட்டு இக்காலத்திற்பல வகையான அநர்த்தங்கட்கு ஏதுவாய் விட்டது.

சீதன வழக்கத்தால் இக்காலத்திற் பெருந் தீமைகள் இடையூறுகள் ஏற்படுகின்றன வென்றும், ஆனதால் இதனை ஒழித்துவிடல் வேண்டுமென்றும் அறிஞர் பலர் பல சந்தர்ப்பங்களில் பேசியும் பத்திரிகைகள் வாயிலாக எழுதியும் வருகிறார்கள். சீதன விஷயமாக அக்காலத்தில் நடந்த முறைக்கும் இக்காலத்தில் நடக்கும்முறைக்கும் பெரும் பேதமுண்டு. அக் காலத்திலே பெற்றோர் தம் பெண்ணுக்குச் சீதனத்தைத் தம் இயல்புக்குத் தகக் கொடுப்ப மணமகன் பகுதியார் மனரம்மியத்துடன் அதனை ஏற்றுக்கொள்வரேயொழியப் போதும் போதாதென ஏதும் பேசுவதில்லையாம். முற்காலத்திலே பெண்ணுக்காகச் சீதனமிருந்தது. இக்காலத்திலே சீதனத்திற்காகப் பெண் இருக்க வேண்டிய தாயிற்று. முந்திப் பெண் பிரதானமே யொழியச் சீதனம் பிரதானமானதல்ல; இப்பொழுது சீதனம் பெரிதேயல்லாமற் பெண் பிரதான மல்லள். அக்காலிற் பெண் கொள்வோர் கன்னிகையின் ஒழுக்கம் அழகு மரபு முதலியவைகளைப் பார்ப்பார்கள்; இக்காலத்திலே மேலே சொல்லப் பட்டவைகளொன்றையும் பொருட்படுத்தாது சீதனமொன்றையே பொருட் படுத்தி நிற்கின்றார்கள்.

இப்படிச் சீதனத்திற்கு ஆசைப் பட்டுநிற்றலால் ஒத்த மரபினரல்லாத ஆடவனுக்கும் கன்னிகைக்கும் இடையே விவாகம் நிறைவேறுகின்றது. இரு பேதமான மரபினர் மணஞ் செய்து இல்வாழ்க்கை நடத்தப் புகும் போது நாயகன் தன் மரபுக்குரிய முறையின்படி நடக்க நாயகி தன்மரபு முறைப்படி நடக்க இருவர் போக்கிற்கும் வித்தியாச மேற்பட இதனால் அவர்கட்கிடையே பிரிவினை ஏற்படுதலுமுண்டு; இனி ஒத்த மரபினரல்லாதாராகிய இவர்கள் பெறும் பிள்ளைகள் தாய்வழி தந்தைவழி யென்னு மிரண்டிற்கும் இடையில் அகப்பட்டு இடருற்று ஒருவழியும் இல்லாமற் போதலுமுண்டு; இது மாத்திரமல்லாமல் இச்சீதனத்தின் பொருட்டு வேற்றுச் சமயத்தவராகிய ஆடவனும் ஆடவளும் கல்யாணஞ் செய்துகொண்டு இடர்ப்படுவதைப் பிரத்தியட்சமாகக் காண்கின்றோம். மேலும் சீதனக் காரியென்று பெண் தன்னை நினைக்கத் தலைப்பட்டுக் கொண்டால் அந்தப் புருஷன் படும் பாடு கொஞ்சமல்லவே.

இக்காலத்திலே சீதன விஷயமாக நேரும் அநர்த்தங்களைக் கூறப்புகின் மிகவிரியும். இப்படியான அநர்த்தங்கள் நேர்கின்றனவே யென்ற காரணம் பற்றிச் சீதனங் கொடுத்தலை அறவே யொழித்துவிடுதற்கான பிரமாணஞ் செய்தல் வேண்டுமெனச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். சீதனம் கொடுக்கவொண்ணாது வாங்கவொண்ணாதெனப் பிரமாணஞ் செய்தல் இயலுமோ என்பது சந்தேகம். அப்படித்தான் ஒருவாறு இயலுமாயினும் அந்தப் பிரமாணம் அபின் கஞ்சா வியாபாரத்தைத் தடுக்கும்படி வைத்த பிரமாணம் போல் அதிக பயன்றராது. இவ்விஷயம் பெண் கொடுப்பாரையுங் கொள்வாரையும் பொறுத்ததாகும். ஆனதால் அவ் விருபாலாரும் இந்நாட்டு மக்களின் மூதாதையராயுள்ளார் அக்காலத்திற் சீதனத்தை என்ன முறையிற் கொடுத்து வந்தார்களோ கொண்டு வந்தார்களோ அந்த முறையில் இக்கால மக்களும் கொள்ளவுங் கொடுக்கவுந் தொடங்கினல் இச் சீதன வழக்கத்தினல் இப்பொழுது ஏற்பட்ட தீமைகளெல்லாமொழிய நன்மை யுண்டாகு மென்பது நமது நம்பிக்கை.

சீதனத்தைப் பெருநோய்க்கு ஒப்பிடலாம்

—0—

போதகரொருவரின் கூற்று

சென்றவாரம் உடுவிற் பெண்விடுதி வித்தியாசாலையில் கனம் ஜேம்ஸ் S. மேதர் 'உத்தம இலங்கை' என்னும் விஷயமாகப் பேசியபோது பின்வருமாறு கூறியுள்ளார்:-

"எங்கள் இலங்கை ஒரு சிறந்த தீவகமாகும். இலங்கையிலே பிறந்தவர்களுக்குத் தம் நாட்டில் விசேஷ அபிமானமுண்டென்பது மெய்; இந்த அபிமானத்தினல் இலங்கையிற்பிறந்துள்ளார் தம் நாட்டிலுள்ள பல தீய வழக்கங்களையும் கொள்கைகளையும் மறந்துவிட வொண்ணாது. அந்தீய வழக்கங்களுங் கொள்கைகளும் இந்நாட்டின் இயற்கையழகையும்கவர்ச்சியையுஞ் சிதைப்பதோடு நில்லாது இங்குள்ள ஆயிரக் கணக்கானோருடைய மனரம்மியமான வாழ்க்கையைக் கெடுத்து அவர்களை அல்லலுடன் காலம் போக்கச் செய்கின்றன.

இத் தீமைகளுட் பிரதானமானது **மதுபானமாகும்.** இம் மதுபானத்தினல் இங்குள்ள குடும்பங்கள் பல கேடடையலாயின. இத் தீமையை உடனே அகற்றிவிட முயலுதல் வேண்டும். பல குடும்பங்களில் அவர்களுடையபணத்தில் ஒருபெரும் பகுதி மதுபானத்திலேயே செலவாகின்றது. இக்குடியினல் பணம் போய் வறுமை உண்டாய்விட, குடிகாரர் தங்கள் பிள்ளைகட்குக் கல்வியூட்டுவிப்பதற்குப் பணமில்லாமல் முட்டுப்படுகிறார்கள். மேலும் இந்த இலங்கையிலுள்ளார் எல்லாரும் படித்தவரென்று சொல்லுதல் முடியாமல் இருக்கின்றது. ஏன்? இங்கே பல்லாயிரக் கணக்கானோர் எழுத வாசிக்கத் தெரியாமலிருக்கிறார்கள்; இன்னும் இலங்கையிலே தொழின் முயற்சியின்மை, பரிதானம் வாங்குதல், வகுப்புவாதம், தரித்திரம் முதலாம் பல தீமைகள் உள்ளன.

இவைகளெல்லாவற்றைக் காட்டிலும் பெருங் கேடுதியாகவுள்ள வழக்கம் **சீதனங்கொடுத்தல் வாங்குதலாம்.** சீதனமென்னும் இப் பெருநோயே (குஷ்டரோகமே) இலங்கைமக்களுடைய வாழ்க்கை நலனையும் தூய்மையையும் கெடுக்கலாயிற்று. இச் சீதன விஷயமாகவே இந்நாட்டில் நடைபெறும் விவாகங்கள் பல தம் மகத்துவங் குறைதலாயின. சீதனத்தின் பொருட்டுக் கல்யாணம் முடிப்போர் தங்கள் சமயம் ஒழுக்கம் ஒத்தமரபு என்னுமிவைகளைப் பொருட்படுத்துகின்றிலர். கிறிஸ்தவ வாலிபன் சீதனத்திற்கு ஆசைப் பட்டுக் கிறிஸ்தவளல்லாத கன்னிகையை மணக்கின்றான்; படித்த வாலிபன் சீதனத்திற்கு ஆசை கொண்டு நிரட்சர குட்சியாகியவொரு கன்னிகையைக் கல்யாணஞ்செய்கின்றான். இப்படியான பொருந்தா விவாகங்களினலே தான் இல்வாழ்க்கை விபரீதப்படுகின்றது. இல்லே ஒரு சாதியாருக்குப் பெருமையைப் பயப்பது; ஒற்றுமையை விளைப்பது; விவாகத்தை இல்வாழ்க்கையின் பொருட்டு மாத்திரம் உத்தேசித்துச் செய்வரேல் இல்லெல்லாம் தூய்மை யுடையனவாக, சனங்களுக்கிடையே செல்வம் மனரம்மியம் முதலிய நன்மைகளுண்டாகும்.

இவ்விலங்கை உத்தம இலங்கையாக வேண்டின் மதுபான நீக்கம், கல்வியறிவின்மை, தொழின் முயற்சிப் பஞ்சம், கைலஞ்சம், சீதனங் கேட்கும் வழக்கம், வகுப்புவாதம், வறுமை யென்னுமிவைகள் இந்நாட்டை விட்டு அறவே ஒழிக்கப்படல் வேண்டும்."

சீதனத்தால் வருந்தீமை

"எங்கள் சனசமூகத்திற்குப் பெருங் கெடுதி விளைக்கும் பழக்க வழக்கங்களுள் சீதனங் கொடுத்தலாகிய வழக்கமே பெருந் தீமையைப் பயப்பது; இந்தப் பெருந்தீய வழக்கத்தைப் பாராட்டித் தூண்டி நின்றவர்கள் இக்காலத்து வாலிபரேயாவர். குடும்பங்களுக்கிடையே இதனாற் பெருந் தீமைகளும் பிணக்குகளும் பிரிவினையும் விளைதலை இவ்வாலிபர்கள் நினைக்கின்றிலர். இக்காலத்து ஆடவர்கள் கன்னியரை மணப்பவரல்லர். அக்கன்னியர் பொருட்டு உதவப்படுஞ் சீதனத்தையே மணக்கின்றார்களென்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. இந்தத் துர்வழக்கத்தினல் இன்னமும் அதிகமான தீமை நேர்தற்கு முன் இதனை அறவே அகற்ற முயற்சிசெய்ய வேண்டுமெனச் சென்றவாரம் டக்டர் A. P. D. செயினா சொல்லியுள்ளார். ஆனதால் கௌரவத்தோடும் சுவாதீனத்தோடும் வாழவிருப்புகோரெல்லாரும் இப் பயங்கரமான தீய வழக்கத்தை அறவே யொழிப்பதற்கு ஐக்கியப்பட்டு உழைத்தல் வேண்டும். பணத்தைக் கொண்டு உலகத்திலே எல்லாப் பொருளையும் விலைக்குக்கொள்ளுதல் முடியாது; திடமற்றவன், பேடி, வஞ்சகன் என்னுமிவர்களே சீதனத்தில் அழுந்தி நிற்பர். இப்படிப் பட்டவர்கள் சீதனத்தை வாங்குவதும் தம்மனைவியைச் சம்ரட்சிக்கவல்ல, தம் இல்வாழ்க்கையை முட்டின்றி இனிது நடத்துவதற்கல்ல. பின்னர் எதற்கென்றால் தம் கூட்டாளிமாரும் தாங்களுமாக இதனைச் செலவிட்டு டாம்பீகமாக வாழ்வதற்கேயாம் -மொழிபெயர்த்தது.

பெண்ணுக்குமுன் பணம் வேண்டும்

மணமகனின் விடாப்பிடி பெண்ணின் அழுகை

மே 20—

நேற்றுக் கொழும்பு ரிஜிஸ்டர் ஜெனரல் காரியாலயத்தில் ஜனங்கள் காத்திருக்கும் அறையில் ஒரு மணமங்கை அச்சம் நிறைந்த முகத்துடன் கண்ணீர் சிந்திய வண்ணமாக உட்கார்ந்து இருந்தாள். ஆனல் மங்கையின் பெற்றோர்களும் சுற்றத்தார்களும் மணமகனுக்கு வாக்குத்தத்தம் செய்த ஸ்ரீதனத் தொகையைச் சேகரிப்பதற்காக நகரைச்சுற்றி அலைந்து திரிந்தனர். மணமகனே வெளியில் ரிஜிஸ்டார் ஜெனரல் கந்தோருக்கு வெளியே ஒரு மோட்டார்க் காரினுள் இருந்துகொண்டு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பணம் கொடுத்தாலொழிய விவாகம் செய்யமாட்டேனெனச் சபதம் கூறியவண்ணமாக இருந்தார். இக்காட்சியைப் பார்ப்பதற்காகப் பெருந் திரளான ஜனங்கள் ரிஜிஸ்டார் ஜெனரல் கந்தோரின் படிக்கட்டுகளிற் குழுமிவிட்டனர்.

திருமணத்தன்று காலையில் மணமகன் கையில் ஒரு குறிப்பிட்ட ஸ்ரீதனம் கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும் பணம் கொடுக்கப்படாததால் தனக்கு வாக்குறுதி செய்யப்பட்டதை நிறைவேற்றுமாறு தாம் திடசித்தத்துடனிருப்பதாகவும் மணமகன் கூறினர்.

குறித்த மணமகன் றெயில்வே இலாகாவில் ஒருதொழிலாளியாவார். என்ன குழப்பமென அவரிடம் கேட்கப்பட்டபோது எல்லாம் பணவிஷயமென அவர் பதில் கூறினர்.

அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாக இருந்த மணமகள் அவளது தோழிப் பெண்களால் ஆபிஸின் மேன்மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். நடுப்பகலுக்குச் சிறிது நேரத்தின் பின்னர் மணமகளின் பெற்றோர்கள் பணத்துடன் வந்து சேர்ந்தனர். விசேஷ அனுமதியின் பேரில் விவாகத்திற்குரிய நடபடிக்கைகள் ஆரம்பமாயின.

இரு இளைஞரின் கோரமரணம்

—0—

தங்காலை மே 18

தங்காலை டிஸ்திரிக்கில மரத்தினின்றும் கீழே விழுந்ததால் இரு வாலிபர்கள் மரணமடைந்தார்களெனச் செய்தி எட்டியுள்ளது.

பி. கே. சர்னேலிஸ் (13) என்னும் வாலிபன் கெதமனேயில் தனது வீட்டிலுள்ள ஒரு கசுக்கொட்டை மரத்தில் ஏறியதும் அவர் ஏறியிருந்த கொப்பு ஒடிந்து விழவே நிலத்தில் விழுந்து மரணமானர்.

ரீ. கே. ஜயசேன (18) என்னும் அம்பலவாசியான வாலிபன் 24 அடி உயரத்தினின்றும் ஒரு பலா மரத்தினின்றும் கால் நழுவி மரத்தின் அடியிலிருந்த பெரிய கல்லின்மீது விழுந்தான். விழுந்த மூன்று மணிநேரத்தில் மரணமானன்.

இரு விபத்துக்களிலும் மரண விசாரணை நடைபெற்றது. அகஸ்மாத்தாக மரணம் ஏற்பட்டதென விசாரணையிற் கூறப்பட்டது.

தகப்பனைக் குத்தியமகன்

ரூபாய் கொடுக்க மறுத்ததன் விளைவு

மாத்தறை மே 17

மாத்தறையைச் சேர்ந்த தபேவாசியான தருணக்கண் நாடார் என்னும் வியாபாரி முதுகில் ஒரு கத்திக்குத்துடன் மாத்தறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டார். இவரது மகனை டேனியல் நாடாரினல் குத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மகன் ஒரு கடை திறப்பதற்காகத் தந்தையிடம் 300 ரூபாய் கேட்டாராம். தகப்பன் மறுக்கவே பெரிய தகராறு ஏற்பட்டது. தகராறு முற்றிச்சண்டை ஏற்படவே, மகன் மடியினின்றும் கத்தியை உருவித் தகப்பனைக் குத்தினர்.

மாத்தறைக் குற்றப்பொலிசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

இந்துசாதனப் பொன்விழா நிதி

	ரூ.	ச
15-5-39ல் வெளிவந்த இதழின்படி ஆகக் கூடியவாவு	751	60
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர்கள் மூலம்	10	50
வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர்கள்மூலம்	9	00
ஸ்ரீ R. சீனிவாசகம், உரும்பிராய்	3	00
,, M. சிவக்கொழுந்து, திருநெல்வேலி	1	00
,, S. குமரேசு, வட்டுக்கோட்டை	1	00
,, R. மயில்வாகனம், இணுவில்	3	00
,, M. கதிர்வேற்பிள்ளை, ஆயுள்வேத வைத்தியர், வண்-கிழக்கு	5	00
,, E. P. இராசையா, வண்ணார்பண்ணை	2	00
,, S. பொன்னையா, "தைபல வாசம்" கல்லூர்	2	00
,, V. சுப்பிரமணியம், திருநெல்வேலி வடக்கு	1	00
,, N. P. சண்முகம், திருநெல்வேலி வடக்கு	1	00
,, S. தம்பாபிள்ளை, கல்வியங்காடு	2	00
பிரமஸ்ரீ N. கந்தசாமிஐயர், சைவாசிரிய கலாசாலை திருநெல்வேலி	2	00
ஸ்ரீ T. M. செல்லப்பாபிள்ளை தெல்லிப்பழை	2	00
ஆகக் கூடியதொகை	796	10

மேலே காட்டப்பெற்ற அபிமானிகட்கு நன்றி கூறி ஏனைய அபிமானிகளையும் இந்நிதியின் பொருட்டு இயன்ற பொருள் உதவும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றேம்.

ச. அருளலிங்கம்,
மனேஜர்.

ம. வே. திருஞானசம்பந்தன்,
பத்திராசிரியர்.

டிரான்ஸ் ஜார்டனுக்குச் சுயவாட்சி உரிமை

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இணக்கம்

டிரான்ஸ்ஜார்டன் பிரதமமந்திரியின் யோசனைகளுக்கு அங்கீகாரம்

லண்டன் மே 16

டிரான்ஸ்ஜார்டன் சம்பந்தமாக அரசாங்கம் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் சாரமாவது:—

டிரான்ஸ்ஜார்டன் பிரதம மந்திரியான டாபிக்பாஷா சமீபத்தில் லண்டனுக்கு வந்திருந்தார்.

பிரிட்டனுக்கும் மாண்டேட் பிரதேசமான டிரான்ஸ்ஜார்டனுக்கும் உள்ள உறவைப்பற்றிய ஒப்பந்தம் நடந்தேறும் முறையைப் பற்றி அவருடன் பிரிட்டிஷ் அதிகாரிகள் விவாதித்தனர்.

டிரான்ஸ் ஜார்டன் பூர்ண சுதந்திர லட்சியத்தை எய்தவேண்டுமென்ற நோக்கத்துடன் டாபிக்பாஷா பல யோசனைகளை வெளியிட்டார். அவற்றில் பலவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடிந்தது.

அங்கு ஒரு மந்திரிசபை ஏற்படுத்தவேண்டுமென்ற கொள்கையையும், ஒவ்வொரு மந்திரியும் ஒரு இலாகா பற்றிய அதிகாரத்தை ஏற்று அமீருக்கு ஜவாப்தாரியாயிருப்பதென்ற கொள்கையையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டனர்.

இராணுவப் படைகள் ஏற்படுத்துவது சம்பந்தமாக அமீரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் முறையில் தற்போதைய ஒப்பந்தத்தில் ஒரு பிரிவிருக்கிறது. அருகாமையிலுள்ள சில அரபிய நாடுகளில் டிரான்ஸ் ஜார்டன் அரசாங்கத்தார் தங்கள் ஸ்தானிகர்களை நியமிப்பதென்ற யோசனையையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

வேறு பல விஷயங்களிலும் சர்க்கார் அமீரின் யோசனைகளை ஏற்றுக்கொண்டுளர். அமீரின் அரசாங்கம் தன்னிஷ்டம் போல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள அதற்கு இன்னும் அதிகமான அதிகாரம் அளிப்பதே அந்தயோசனைகளின் கருத்தாகும்.

[டிரான்ஸ் ஜார்டன் ஜனங்களிடையும், ராணுவத்திடையும் மிக்கக் கிளர்ச்சி ஏற்பட்டதாகவும், கலகத்தை அடக்க 5000 பிரிட்டிஷ் துருப்புகள் டிரான்ஸ் ஜார்டனுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் சமீபத்தில் ஒரு செய்தி வெளியானதும், அதை பிரிட்டிஷ் அதிகாரிகள் மறுத்ததும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும்]

விளம்பரம்

(1) கதிர்காமத்தில் வருடாந்த எசல பெரகெருத் திருவிழா 1939ஆம் ஆண்டு ஆடி மாதம் 17ஆம் திகதி தொடங்கி ஆடி மாதம் 31ஆம் திகதி முடியுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

(2) திருவிழாபோகும் யாத்திரிகளுக்கு அனுமதிச் சீட்டு தேவை இல்லை.

(3) கதிர்காமத்தில் சாப்பாட்டுச் சாமான்கள் கிடைப்பது நிச்சயமில்லை. ஆகையால் எல்லா யாத்திரிகளும் தங்களுடைய சொந்தச் சாப்பாட்டுச் சாமான்களைக் கொண்டுவரும்படி புத்தி சொல்லப்படுகின்றனர்.

(4) யாத்திரிகள் 1939ஆம் ஆண்டு சித்திரைமாதம் 28ஆம்திகதி ராஜாங்க இலங்கை வர்த்தமானியில் வெளிப்பட்டிருக்கும் பிரமாணங்களுக்கு இசைய நடக்க வேண்டும்.

(5) கதிர்காம பாடியின் எல்லைக்குள் சாப்பாட்டுக் கடைகள், தேநீர், கோப்பிநீர்க் கடைகள் பின் சொல்லப்பட்ட இடங்களுக்குள் மாத்திரம்தான் வைத்திருக்கவிடப்படும்-

(a) வெளித்தெரு புத்தளை ரோட்டுச் சந்தியில் இருந்து பாபர் மடத்திற்கும் சடை அய்யா மடத்திற்கும் உள்ள எல்லை வரைக்கும், உள் தெருவில் நிலபரமான கட்டடங்களில் மாத்திரம்.

(b) புத்தளை ரோட்டு

(c) மகா தேவாலே கருங்கல்வீதி எதிரே இருக்கும் தெய்வானை அம்மா கோவில் எல்லைப் பக்கம்

(d) டெற்றசம்முவ கிராமம்

(6) ஒரு கடையாகுதல் ஆற்றங் கரை ஓரம் கதிர்காமபாடி எல்லைக்குள் வைத்திருக்க விடப்படமாட்டாது.

(7) திசமாகாருமை — கதிர்காம கிற ரோட்டிலிருந்து கிழக்குப்புறமாக 35 அடி தூரத்திற்கு அப்பாலும் மாணிக்க கங்கையின் வலது கரைப் பக்கத்திலும் தவிர வேறு இடத்தில் நாவிதரின் கடை வைக்க விடப்படமாட்டாது. (பாபர் சாப்புகள்)

(8) ஊவா மாகாண அரசாங்க ஏஜண்டு அவர்களிடம் இருந்து ஓர் அதிகாரம் கொடுக்கும் அனுமதிச் சீட்டு முன் எடுக்காமல் பாடிக்குள் ஒருவராகுதல், அப்பச் சாலையாகுதல் சோடா உண்டாக்கும்கடையாகுதல், தேநீர், கோப்பிநீர்க் கடையாகுதல், சாப்பாட்டுக் கடையாகுதல், மாட்டுக் காலையாகுதல் வைக்கப்படாது. அனுமதிச் சீட்டு விண்ணப்பங்கள் புத்தளை ரட்டமகாத்மயா, புத்தளை போஸ்டிற்கு அனுப்பவேண்டும். இப்படிப்பட்ட அனுமதிச்சீட்டுகள் செலவு இல்லாமல் கொடுக்கப்படும்.

எச். ஜெ. லடிகேடன்,
ஊவா மாகாண அரசாங்க ஏஜண்டு.

வதுளைக் கச்சேரி,
வைகாசிமாதம் 18ஆம் திகதி.

(G. 6. 22-5-39.)

கந்தானைபஜார்கத்திக்குத்து

கம்பஹா மே 19

மே மாதம் 14-ந் திகதியன்று கந்தானை பஜாரில் வைத்துக் கந்தானை வாசியான கோதியானு என்பவரை கத்தியால் குத்திக் கொலைசெய்ததாகவும் அவரது மனைவி அன்னஹாமிக்குப் படுகாயம் விளைவித்ததோடு அலிசினஹாமிக்குக் காய விளைவித்ததாகவும், கந்தானை வாசியான ஜோசகா என்ற கொலகொடகே ஜெகினு என்பவரைக் குற்றஞ் சாட்டிக் கம்பஹா நீதவான் முன்பாகக் கந்தானைப் பொலிசைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் பி. இளையதம்பி ஒரு வழக்குத் தொடர்ந்தார்.

எதிரி தான் குற்றவாளியல்ல வெனக் குறிப்பிட்டார்.

மேல்விசாரணையை மே மாதம் 25-ந் தேதிக்கு நீதவான் தவணையிட்டார்.

பாதத்துக்கு விசிறும் பாதரட்சை

நடக்க நடக்கப் பாதத்திற்கு விசிறும் ஒரு நவீன பாதரட்சை நியூயோர்க்கைச் சேர்ந்த ஜோன் க்ரூபர் என்பவரால் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

இப்படியிருந்தும் இந்தப் பாதரட்சை சாதாரண சப்பாத்துப் போலவே யிருக்கிறது.

சப்பாத்தின் அடிப்பாகம் இரண்டு, தனித்தனித் தோலாக இருக்கும். இவைகளுக்கிடையே பல குருட்டுக்கம்பிகள் இருக்கும். சப்பாத்தை அணிந்து கொண்டு நடக்க நடக்க இரண்டு தோல்களுக்கும் இடையிலுள்ள அறைபோன்ற பாகம் நெருங்கி விரிவதால் துருத்திபோல்காற்று அடிக்கும். இக்காற்றுச் சப்பாத்துக்குள் நேரிய பாதவிரல்கள் மேல அடிக்கும்படி துவாரங்கள் இருக்கின்றன.

இந்தப் பாதரட்சையை ஸ்ரீ க்ரூபர் 'பேடண்ட்' செய்திருக்கிறார்.

2ஓநாய்களின் அட்டகாசம்

ரத்தினகிரி மே 18—

இரத்தினபுரி டிஸ்திரிக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் தங்கள் வீட்டிற்கு வெளியே ஒரு திறந்த இடத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த 7 பேரை இரண்டு காட்டு ஓநாய்கள் கடித்துவிட்டன. 7 பேரிலொருவன் நிலைமை அபாயத்தாக இருந்து வருகிறது. ஏழுபேர்களும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கிராமத்தார்கள் சேர்ந்து ஒரு ஓநாயைக் கொன்று விட்டனர். அவர்கள் மற்றொரு ஓநாயையும் கொன்றுவிடுவதற்காக அது இருக்குமிடத்தைக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

மன்னர் தம்பதிகளுக்கு வழிநெடுக வரவேற்பு

செவ்விந்தியர்கள் யுத்த கோஷத்துடன் எதிர்கொண்டழைத்த வைபவம்

ரக்பி மே 18

க்யூபெக்கிலிருந்து மாண்டிரீல் நகரத்தை அடையும் வரையில் மன்னர் தம்பதிகளுக்கு உற்சாக வரவேற்பு வழி நெடுகனும் அளிக்கப்பட்டது. இன்று பிற்பகல் மன்னர் தம்பதிகள் மாண்டிரீலை அடைந்தனர்.

மாண்டிரீல் ஸ்டேசனில் சொல்ல முடியாத கூட்டம் மன்னர் தம்பதிகளை எதிர்கொண்டழைத்தது. இங்கு மன்னர் தம்பதிகள் திறந்த காரில் சென்றபொழுது மக்கள் வழிநெடுகும் குழுமி ராஜ தரிசனம் செய்தனர்.

பழையகால யுத்த ஆரவாரங்களுடன் சிவப்பிந்தியர்கள் மன்னர் தம்பதிகளை வரவேற்றனர்

ராஜ மரியாதை அணிவகுப்பை மன்னர் பார்வையிட்டபொழுதும் ராஜமரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டபொழுதும் கூட்டத்தினர் உற்சாக கோஷங்களை எழுப்பிக்கொண்டேயிருந்தனர்.

வரவேற்பு அளிக்கப்பட்ட பிறகு மன்னர் தம்பதிகள் நகரின் வழியாகத் திறந்த காரில் ஊர்வலம் சென்றனர். அவர்கள் 24 மைல்கள் தூரத்தை ஊர்வலமாகக் கடந்தனர். தோரணங்களும் மற்ற வரவேற்புச் சின்னங்களும் அழகு செய்தன.

இரவில் நகருக்கு வந்த ஜனங்கள் மட்டும் 2½ லட்சமிருக்குமென்று பொலிசார் மதிக்கின்றனர்.

பிரஞ்சுமக்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கெல்லாம் சென்று விட்டு மன்னர் தம்பதிகள் 85,000 பிரஞ்சு பேசும் குழந்தைகளைச் சந்தித்தனர். குழந்தைகளின் மகிழ்ச்சி மட்டற்றதாக விருந்தது.

மன்னர் தம்பதிகள் நகரசங்கப் புத்தகத்தில் கையெழுத்திட்டார்கள். இவர்கள் மால்கன் ஸ்டேடியத்திற்குச் சென்ற பொழுது அவரை இங்கிலீஷ் பேசும் குழந்தைகளில் 15,000 பேர்கள் வரவேற்றனர்.

வீட்டின்மீது விழுந்த தென்னைமரம்

பொல்காஹவெல மே 17—

பந்தானையில் ஒரு வீட்டிற்கு 20 யார்களுக்கப்பால் நின்ற ஒரு பெரிய தென்னைமரம் திடீரென வீட்டின் மீது சாய்ந்தது. தெய்வாதீனமாக வீட்டுவேலைக்காரர் தப்பினர். மரம் வீட்டுக்குசினி கூரையின் மீது சாய்ந்தது. வீட்டிற்குச் சில யார் தூரத்திலிருந்த ஒரு மாக் குடிசையும் மரம் விழுந்தவுடன் சாய்ந்துள்ளது

பண்டமாற்று ஒப்பந்தம்

இத்தாலிக்கும் ருமேனியாவுக்கு மிடையில் ஏற்பட்டது

ரோமாபுரி மே 18

இத்தாலிக்கும் ருமேனியாவுக்குமிடையில் பண்டமாற்று உடன்படிக்கையொன்று முடிவடைந்திருக்கிறது. இதன்படி இத்தாலி ருமேனியாவிடமிருந்து 80,000 தொன் தவதானியங்களும் 35,0000 தொன் பெட்ரோலும் வாங்கும். இதற்கு மாற்றாக இத்தாலி செயற்கைப் பட்டுச் சாமான்கள், மோட்டார்கள், கைத்தொழில் இயந்திரங்கள் முதலியவற்றை ருமேனியாவுக்குக் கொடுக்கும்.

ருமேனியாவின் கடல் வர்த்தகத்தைப் புனருத்தாரணம் செய்வதிலும் இத்தாலி ருமேனியாவுக்கு உதவியளிக்கிறது.

இத்தாலிய கப்பல் நிபுணர்கள் ருமேனியாவுக்கு அனுப்பப்படுவார்கள்.

பெர்லினுக்கு விஜயம்

பெர்லின் மே 16

இத்தாலிய அயல்நாட்டு மந்திரி கவுண்ட்சியானோ ஞாயிற்றுக்கிழமையன்று இங்கு வந்து சேருகிறார். இத்தாலோ ஜெர்மன் இராணுவ உடன்படிக்கை அநேகமாய்த் திங்கட்கிழமையன்று கையொப்பமிடப்படும்.

திருச்சி ரேடியோ நிலைய ஆரம்ப விழா

சென்னைப் பிரதம மந்திரியின் சொற்பொழிவு

பிரதம மந்திரியின் ஆசி

—:o:—

திருச்சினாப்பள்ளி ரேடியோ நிலையத்தை ஆரம்பித்து வைக்கும்போது சென்னைப் பிரதம மந்திரி கனம் ஸி. ராஜகோபாலாச்சாரியார் தமிழில் செய்த பிரசங்கம் பின்வருமாறு:—

வானத்தில் ஒன்றும் கோளாறு அதிகம் இல்லாது இருந்தால் நான் சொல்வது உங்களுக்கெல்லாம் நன்றாகக் கேட்கும். இன்றுதான் திருச்சினாப்பள்ளியில் தமிழ் நாட்டுக்கு என்று ஏற்படுத்தப்பட்ட வானொலி நிலையத்தின் திறப்புவிழா. அங்கிருந்து வான்மூலம் வீசப்பட்டு என் பேச்சாக நீங்கள் கேட்கிறீர்கள், தந்தி போட்டு அதன் மூலம் சமாச்சாரம் சுருக்கமாக அனுப்புவதையும் அதற்குப்பின் டெலிபோனிலிருந்து ஒருவரோடொருவர் நேருக்கு நேர் சம்பாஷணை செய்வதையும் கண்டோம். அதுவே பெரும் வியப்பாக இருந்தது. ஆனால் டெலிபோன் அமைப்புக்குத் தந்திவேண்டியிருந்தது, இப்பொழுதோ எனக்கும் உங்களுக்கும் தந்தி ஒன்றும் இல்லாமலே வான் மூலம் வெட்ட வெளியைப் பாய்ந்து பேச்சு நடக்கிறது. ஓரிடத்தில் ஒருவர் பாடினாலோ அல்லது வாத்தியம் வாசித்தாலோ அதை நூற்றுக்கணக்கான மைல்களில் இருந்த இடத்திலிருந்து ஒரேசமயம் அனைவரும் கேட்கும்படியாக ஒரு இயந்திரம் இப்பொழுது ஏற்பட்டு விட்டது. இதை யோசிக்க யோசிக்க எனக்கு ஆச்சரியம் பொங்குகிறது. உங்களுக்கெல்லாம் சகஜமாக இருக்கலாம். எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது, மாட்டுவண்டிக்குப் பின் குதிரை வண்டி வந்தது அதைக்கண்டு வியந்து இதற்குமேல் ஒன்றும் இல்லை என்று எண்ணினோம்.

அற்புதங்களுக்கு முடிவு இல்லை

இதுவே அற்புதங்களுக்கு முடிவு என்று தீர்மானித்தோம். பிறகு மோட்டார்வண்டி வந்து தங்கு தடையில்லாமல் சாதாரண பாதைகளில் புகைவண்டி வேகத்திற்கு சமமாகவும் அதிகமாகவும் கூட இந்த மோட்டார்வண்டி இங்குமங்கும் நடந்து ஓடியதை நாமே பார்த்து வியந்தோம். பிறகு 'காற்று விமானங்கள் வந்து விட்டன. ஆகாயத்தில் இங்குமங்கும் கர்ஜனை செய்துகொண்டு சீதையைத் தூக்கிப்போன புஷ்பகம்போல் விமானங்கள் இப்பொழுது ஆகாயத்தில் பறக்கின்றன. நம்மவர்களில் சிலர் அவ்விமானங்களை நடத்துகிறார்கள். புராணக் கதைகள் தோற்கடிக்கப்பட்டன. கண்மூடி கண்திறப்பதற்குள் ஒருவருடைய உருவத்தைப் பிடித்துப் பதியச் செய்யும்போட்டோ பெட்டியின் அற்புதம் அனைவருக்கும் தெரியும். நாம் கண்ணால் பார்த்த விஷயமெல்லாம் அந்த போட்டோபெட்டி உள்ளது உள்ளபடி ஒரு அணு தவறாமல் பதியவைத்துக்கொள்ளுகிறது. இவ்வாறே யாராவது பேசினாலோ பாடினாலோ அதை அப்படியே தட்டில் பதியவைத்து வேண்டும்போது அதைப் பேசச் செய்யலாம். போட்டோபெட்டியையும் ஒலித் தட்டையும் வைத்துக்கொண்டு ஆள் இறந்தாலும்கூட என்றென்றைக்கும் பார்க்கவும் கேட்கவும் ஆள் உலகத்தில் மறைந்துபோனாலும் கூடவும் சிரஞ்சீவியாக இருப்பதுபோல செய்து கொள்ளலாம். வானொலி அமைப்பினாலே இப்பொழுது திருச்சினாப்பள்ளியில் உட்கார்ந்து ஒருவர் நன்றாகப்பாடினால் அல்லது பேசினால் தமிழ்நாடு முழுவதும் அமுதமான வெள்ளமாக இப்பொழுது தமிழர் அனைவர் காதுகளிலும் அந்தத்தத் தேன்வந்து படியும்.

"சக்திகளுக்கு வரம்பேயில்லை"

அற்புதங்களுக்கு முடிவே இல்லைபோல் இருக்கிறது. பிரம்மத்தில் அடங்கி நிற்கும் பலவேறு சக்திகளுக்கு வரம்பேயில்லை. கடலிலிருந்து மீன் பிடிப்பது போல் பராசக்தியென்னும் பெரும் கடலில் அடங்கி நிற்கும் பலவேறு சக்திகளை ஒவ்வொன்றாகக் காண்கின்றோம். நாம் புது சக்திகளை உண்டாக்கவில்லை. இருந்த சக்திகளை வலைபோட்டுப் பிடிக்கின்றோம். அவ்வளவுதான். மீனை உண்டாக்கமுடியாது. செம்படவனைப்போல் மீனைப் பிடிக்கின்றோம். அதுவே ஒரு பெருமை வானொலி அமைப்பின் மூலம் ஈசுவர தரிசனம் ஒருவாறு அடைந்தோம் என்று உணரவேண்டும் வானொலியால் நாடு முழுவதும் மகிழ்ச்சியைப் பரப்பலாம்.

மகிழ்ச்சி என்பது உயிருக்கு அடையாளம். மகிழ்ச்சியேதான் உயிர் ஆகிறதென்றும் கூடச் சொல்லலாம்; மகிழ்ச்சியே ஆத்மாவின் அந்தரங்க ஸ்வரூபம் உயிர் உரியதற்கும் உயிர் அற்றதற்கும் வித்தியாசம் மகிழ்ச்சியே மகிழ்ச்சியில்லாதவர் உயிர் அற்ற ஜடராகும். உணவுப்பொருள் மட்டும் உயிருக்குப் போதாது மகிழ்ச்சியும் வேண்டும், உணவு உடலாகிறது மகிழ்ச்சி மனமாகிறது, பரிசுத்தமான விளையாட்டுகளும் ஆடலும் பாடலும் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பாடு செய்யவேண்டும். மகிழ்ச்சியைப் பரப்ப இந்த வானொலி ஒரு நல்ல யந்திரம் ஆகும். இனிய பாட்டும் நல்ல பேச்சும் தமிழ்நாடு முழுவதும் பரப்பும் அமைப்பு இன்று திருச்சினாப்பள்ளியில் திறக்கப்பட்டது அது நல்ல வழியில் பயன்பட்டு எல்லா ஊர்களிலும் விடா மகிழ்ச்சியும் புத்துயிரும் தருமாறு ஆண்டவனை வேண்டுகிறேன்.

ஒரு வேண்டுகோள்

அகில இந்திய ஒலிபரப்பு இலாகாவுக்குத் தமிழர் சார்பாக நன்றி செலுத்துகிறேன். நகரங்களில் பெரிய மனிதர்கள் தங்கள் தங்கள் வீட்டில் வானொலிப்பெட்டி வாங்கி வைத்துக்கொண்டு பிரத்தியேகமாக அனுபவிக்கலாம். குறைந்த விலைக்குப்பெட்டிகள் இப்பொழுது கிடைக்கிறது. கிராமங்களில் ஊர் முழுவதும் கேட்கும்படியாக கோவிலோ சாவடியிலோ அல்லது வேறு நல்ல இடத்தில் ஒவ்வொரு ஊரிலும் ஊருக்குப் பெரிய மனிதரான ஒருவர் தர்மமாக ஒரு பெட்டிவாங்கி அமைத்துவிடவேண்டும். தமிழ் நாட்டில் சங்கீத உணர்ச்சி அதிகம். வானொலி அமைப்பினால் இந்த உணர்ச்சி இன்னும் பெருகும் எல்லோரும் நன்றாகப் பாடக் கற்கவேண்டும்.

முடிவில் ஒருபேச்சு வானொலிப் பெட்டி வந்துவிட்டதென்று ஊரில் நன்றாகப் பாடுகின்றவர்களையும் வாத்தியம் வாசிப்பவர்களையும் மறந்துவிடவேண்டாம் வீட்டில சிறுமிகள் பாடுவதும் ஆடுவதும் நின்று போகக் கூடாது. புதிய யந்திரங்கள் என்னென்ன வந்தாலும் நேரில் பாடும்பாட்டும் ஆடும் ஆட்டமும் பேசும் பேச்சும் வேறே பெட்டியிற் கேட்பது அதற்குச் சமானம் ஒருநாளும் ஆகாது நான் பேசி முடிக்கிறது. போய்வருகிறேன் விடை கொடுக்கவேண்டும்.

தேசாதிபதி கொழும்பு திரும்பினார்

மே 18—

நேற்று முன்தினம் இரவு கோச்சியில் நுவரெலியாவிலிருந்து புறப்பட்ட தேசாதிபதி நேற்றுக் காலை கொழும்பு வந்து சேர்ந்தார். ஞாயிற்றுக் கிழமை இரவு நுவரெலிய குவின்ஸ் ஹோட்டேலில ரியர் அட்மிரல் லியதாம் தேசாதிபதியின் விருந்தாளியாக இருந்தார்.

தொல்புரத்தில் படுகாயம்

கோவில் உரித்துப்பற்றிய தகராற்றின் விளைவா?

20—5—39

தொல்புரத்தைச் சேர்ந்த M. முத்தையா K. காசிப்பிள்ளை M. குமாரசாமி ஆகியவருள் முதலாம் எதிரி பண்ணாகத்தில் வசிக்கும் K. கந்தையாவுக்கு அபாயகரமான காயம் வருவித்ததாயும் P. கந்தையாவுக்குச் சாதாரண காயம் வருவித்ததாயும் இரண்டாம் எதிரி முதலாம் எதிரி K. கந்தையாவுக்கு அபாயகரமான காயம் வருவித்ததற்கு உடந்தையாயிருந்ததாயும் மூன்றாம்எதிரி M. அப்புக்குட்டி என்பவருக்குக் காயம் வருவித்ததாயும் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு இன்று டிஸ்திரிக் நீதிபதி திரு. C. குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிரிகட்காகத் திரு. J. பிலிப்ஸ் திரு. C. T. சுவாமிநாதனின் உதவியைக் கொண்டு வாதித்தார்.

வழக்கின் சாராம்சமாவது:—

தொல்புரத்தில் இருக்கும் வடக்கம்பராய் அம்மன் கோவிலுக்குப் பூந்தோட்டமொன்று உண்டு. இந்தப் பூந்தோட்டத்திலுள்ள பூக்களை எந்தநேரம் அம்மனுக்கு உபயோகித்து வந்தனர். இக்கோவிலை இப்போது இராமலிங்கம்-சிவப்பிரகாசம் மனேச்சராக இருந்து நடத்தி வருகிறார். இச்சம்பவம் நடப்பதற்கு முன்னர் இக்கோவில் கட்டப்பட்ட நிலமும் மேற்கூறிய பூந்தோட்ட நிலமும் எதிரிகளாகிய மூவரின் முன்னோரால் அளிக்கப்பட்டமையால், அவர்கள் தாங்களே அக்கோவிலுக்கு உரித்தாளரென வாதாடினர். இவ்வாதாட்டத்தில் இவர்களையும் சேர்த்துக் கோவிலை நடப்பிக்கும் ஓர் உடன்படிக்கை செய்யப்பட்டது. இவ்வுடன்படிக்கையில் ஏதோ பிழை ஏற்பட்டு எதிரிகள் சில வழக்குகளை இப்போது மனேச்சராக இருப்பவர் மீது தொடர்ந்தனர்.

இந்தக் கத்திக்குத்து வழக்கு நடப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னர், மேற்கூறிய பூந்தோட்டத்துக்குள்ள வழியை மூன்றும் எதிரியும் அவருடைய தகப்பனுமாக அடைத்தனர். இப்படி வழியை மறித்து அடைத்ததைக்கண்ட பூசாரியாகிய சுப்பிரமணியம் என்பவர் அவ்வூர் விதானையாருக்கு அறிவித்தார். விதானையாருக்கு அறிவித்தபின்னர், மல்லாகம் பொலிஸ் நீதிபதியிடம்சென்று முறையிட்டு அவ்வழியைத் திறக்கும்படி கேட்டார். நீதிபதி சங்கானை மேற்கு விதானையாரின் வாய்முறைப்பாட்டைப் பதிந்த பின்னர், அதனைத் திறந்து கொடுக்கும்படி ஒரு கட்டளையைப் பிறப்பித்தார்.

விதானையார் வட்டுக்கிழக்கு விதானையாருடன் அக்கட்டளையின் பிரகாரம் மறுநாட்காலை அவ்விடத்திற்குச் சென்றார்கள். அங்குசென்று அவ்வழியைத் திறந்து வைத்தார்கள். எதிரிகள் அதனைத் திருப்பவும் அடைத்தனர். ஆகவே இருபகுதியாருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டுச் சண்டை மூண்டது. இச்சண்டையில் முதலாம் எதிரி K. கந்தையாவுக்கும் P. கந்தையாவுக்கும் காயம் வருவித்தார் என்றும், மூன்றும் எதிரி M. அப்புக்குட்டிக்குக் காயம் வருவித்தார் என்றும் இரண்டாம் எதிரி K. கந்தையாவைக் கட்டிப் பிடிக்கும்போது முதலாம் எதிரி வெட்டினார் என்றும் தெரிகிறது. இச்சம்பவம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிசார் காயக்காரரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இவ்வழக்கிற் குரிய வழக்காளி பகுதி சாட்சிகளை விசாரணை செய்தபின், நீதிபதி எதிர்பக்கத்தாரின் விசாரணைக்காகத் தவணையிட்டார் ந—கி

ருஷியாவின்பதில் பற்றிப் பரிசீலனை

லண்டன் அயல்நாட்டுக் காரியாலயத்தில் வெகு நுட்பமாக நடந்து வருகிறது

லண்டன் மே 16

கிழக்கைரோப்பிய பாதுகாப்பு விவகாரங்கள் விஷயமாக ருஷியாவிடமிருந்து வெகு சமீபகாலத்திற் கிடைத்த குறிப்புகளுக்குப் பிரிட்டன் தனது பதிலையனுப்புவதிற் காலதாமதம் நேர்படாது. நேற்றைய தினம் ருஷியாவின் பதில்கிடைத்தது முதற்கொண்டு அயல்நாட்டுக் காரியாலயம் அதை நுணுக்கமாகப் பரிசீலனை செய்து வருகிறது.

ஜெனிவாவிற் சம்பாஷணைகள்

அயல் நாட்டு மந்திரி ஹலிபாக்ஸ் பிரபு சனிக்கிழமையன்று காலை லண்டனைவிட்டு ஜெனிவாவுக்குப் புறப்படுகிறார். போகும் வழியில் அவர் பரிஸில் பிரஞ்சுப் பிரதம மந்திரியையும் அயல் நாட்டு மந்திரியையும் கண்டு பேசுவார்.

திங்கட்கிழமையன்று ஜெனிவாவில் நடக்கும் சர்வதேச சங்கக் கவுன்ஸில் ஆலோசனைக் கூட்டத்திற்கு லண்டனிலுள்ள சோவியத் ஸ்தானிகர் திரு. மேய்ஸ்கி தான் சோவியத் பிரதிநிதியாக இருப்பாரென்று ஜெனிவாத் தகவல்கள் கூறுகின்றன.

வெள்ளிக்கிழமையன்று பொதுமக்கள் சபையில் அயல்நாட்டு விவகாரங்களைப்பற்றி விவாதம் நடக்கையில் ஆங்கிலோ சோவியத் பேச்சு வார்த்தைகளைப்பற்றியும் பிரஸ்தாபிக்கப்படும். லிபரல் எதிர்க்கட்சித் தலைவர் ஸேர். ஆர்ச் பால்ட் சின்க்ளெர் விவாதத்தை ஆரம்பிப்பார்.

அடுத்தவார ஆரம்பத்தில் ஹலிபாக்ஸ் பிரபுவும் சோவியத் அயல் நாட்டு மந்திரி திரு. பொடெம்கினும் ஜெனிவாவிற் கூடிப் பேசுவார்கள். ஐரோப்பிய பாதுகாப்புப்பற்றிச் சோவியத்துக்கும் பிரிட்டனுக்கும் நடக்கும் சம்பாஷணைகள் சுலபமாக நடக்கும்படியாக இராஜதந்திரப் பேச்சு வார்த்தைகள் மூலமாகப் பிரதான விவகாரங்கள் தீர்க்கப்படுவது விரும்பத்தக்கதென்று கருதப்படுகிறது.

கோழிமுட்டையில் வெள்ளித் தொட்டில்

தூத்துக்குடியில் ஓர் அதிசயம்

தூத்துக்குடி மே 15

தூத்துக்குடி தென்பாகம் கஸ்டம்ஸ் வோர்க்ஷாப் பக்கத்தில் கபித்தான் வில்லவராயர் வளவில் வெகுகாலமாகக் குடியிருந்து வருபவரும் வேம்பார் வாசியுமாகிய ஸ்ரீமான் அந்தோனி பர்னாந்து அர்ச் அந்தோனியாரின் பேரில் அளவுகடந்த பக்தியினால் அர்ச் அந்தோனியாரின் திருவுருவத்தை வீட்டில் வைத்து ஆராதித்து வருஷங்கள் தோறும் உற்சவங்கள் அதிவிமரிசையுடனும் நடத்தி வந்திருக்கிறாராம். ஸ்ரீமான் அந்தோனி பர்னாந்தின் கடவுட் பக்தியைக் கேள்விப்பட்ட கடலாடிக் கிராமவாசியான ஸ்ரீமான். பிச்சைப் பர்னாந்து அர்ச் அந்தோனியாருக்குக் கோழியொன்று நேர்ந்து வைத்து அதை வளர்த்து வரும்படி அந்தோனி பர்னாந்தனிடம் வழங்கினாராம்.

அக்கோழி அந்தோனி பர்னாந்து வீட்டில் வளர்க்கப்பட்டு வருகையில் மேற்படி கோழியிட்ட முட்டைகள் அனைத்தும் வாத்து முட்டைகள் போன்று அவ்வளவு பெரிதாகவும் இருந்தனவாம். மேற்படி அந்தோனி பர்னாந்தின் இளைய குமாரனை தொம்மை பர்னாந்து விளையாட்டாக மேற்படி கோழியிட்ட முட்டைகளில் ஒன்றைக் கத்தியாற் வெட்டிவிட கோழிக் குஞ்சுக்குப் பதிலாகக் கருவிலிருந்து ஒரு சிறிய வெள்ளித் தொட்டிலும் அதில் ஓர் குழந்தை வடிவமும் காணப்பட்டனவாம். குறித்த செய்தி நகரெங்கணும் பரவப் பல்லாயிரக்கணக்கானவர்கள் மேற்படி காட்சியைக் கண்டு தரிசித்து வருகின்றனர். மேற்படி கோழியின் சொந்தக்காரரான கடலாடி வாசிக்கு இது விஷயம் தெரிவிக்கப்பட்டு மேற்படியூர் வாசிகளும் இவ்வற்புத தரிசனத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனராம்.

(சுதேசமித்திரன்)

கந்தபுராணக் கவிநுட்பம்

கணங்கள் செல்படலம்

[வித்துவ சிரோன்மணி ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள் வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியினின்று எடுத்த அரும்பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.]

நீண்ட சீருருத் திரர்தமை நிறைந்தபல் கணத்தை
யீண்டு தேவரை முனிவரை விற்றவிற் றிசையா
வாண்டு தன்விரற் சுட்டியே யாதிநா யகற்குக்
காண்டல் செய்துநின் றேத்தினன் வேத்திரக் கரத்தோன்

பரந்த புகழோடு கூடிய உருத்திரர்களையும் நிறைவாகிய பல சிவகணத்தவர்களையும், ஆங்கு வந்து நெருங்கியுள்ள தேவர்களையும் முனிவர்களையும் தனித்தனி இன்னின்னாரென்று விண்ணப்பஞ் செய்து, அப்பொழுது தமது சுட்டுவிரலாற் சுட்டிப் பரம்பொருளாகிய சிவபிரானுக்கு, பொற்பிரம்பைத் தரித்துள்ளவராகிய திருநந்தி தேவர் காட்டிக் காட்டித் துதித்தனரென்பது பொருள்.

சிவகணத்தவர் பல திறத்தினராதலின் பல்கணத்தையென்றார்; சுட்டியே காண்டல் செய்தனனென முடிக்க. காட்டல் செய்தனனென்பது எதுகை நோக்கிக் காண்டல் செய்தனர் என வந்தது. இனிக் காண்டல் செய்தனனென்பதற்குக் காணச் செய்தனனெனப் பொருள் சொல்லினும் பொருந்தும். காண் தன்வினை, காட்டு பிறவினையாக, "காணபித்து" என உரைத்தல் அத்துணைச் சிறப்பின்று. திருநந்திதேவர் வேத்திரக் கரத்தினராயினும் அவ் வேத்திரத்தைக் கொண்டு சுட்டிக் காட்டினர். காட்டப்படும் தேவர்க்கும் காட்டும் இறைவனுக்கும் வேத்திர வாயிலாகக் காட்டுதல் பெருமைக்கு இழுக்காகுமாதலின் அங்ஙனஞ் செய்யாது தன் விரற் சுட்டியே காண்டல் செய்தனரென்க. ஆங்கு வந்துள்ள உருத்திர கணத்தோர் சிவகணத்தோர் தேவர் முனிவர் முதலிய யாவரையும் எல்லாமறிந்த தலைவனுக்குக் காட்டும் பெரும்பேறு தமக்குக் கிடைத்ததே யென்பதை நினைந்து நினைந்து பத்திமேல் கூர்ந்து நந்திதேவர் இறைவனை நின்று வந்தித்தனரென்பது உணர்தற்பாற்று.

[இங்கே சிவபிரான் முற்றறிவுடையாராகவும் அறியாதவர்க்குக் காட்டுதல் போல நந்தியந்தேவர் காட்டியதென்னையெனின், முன்னறிந்தவர் வந்தாலும் கட்டியக்காரன் அரசனுக்கு முன்னின்று அவரைக்காட்டித் துதித்தல் அரசனுக்கு மரியாதை செய்தலாதலின் இங்கே நந்திதேவரும் அப்படிச் செய்தாரென்க.]

1939-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடந்த தமிழ் J. S. C. பரீட்சைப் பெறுபேறுகள்

* இவ்வடையாள மிடப்பட்ட பெயர்கள் முதலாம் பிரிவிற் சித்தியெய்தியோரைக் குறிக்கும்

மட்டக்களப்பு

காத்தான்குடி
BT 2* கணபதிப்பிள்ளை M
5 விவேகானந்தமுதலி S
6 கனகசபை V
7 சந்திரசேகரம் S
8* விநாயகமூர்த்தி V

மட்டக்களப்பு சென்மேரிஸ் சாதனா பாடசாலை
9* விநாயகமூர்த்தி K
11 செல்லத்துரை V T
12 சிவக்கொழுந்து T

யாழ்ப்பாணம்

அளவெட்டி நாகபூஷணி வித்தியாசா.
J 2 கோவிந்தசாமி S
4 தம்பிராசா K

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய கலவன் பாடசாலை
5 சிவஞானசுந்தரம் A

நெடுந்தீவு மேற்குசைவப்பிரகாச வித்.
9 வேலாயும் K
12 கனகராசா K
15 சேதுபதி S

எழாலைவடக்கு அமரிக்கன்மிஷன் பாடசாலை
20 வல்லிபுரம் E

இணுவில் இந்து கலவன் பாடசாலை
21 பசுபதிப்பிள்ளை S
23 கந்தையா S

இணுவில் சைவமகாசனவித்தியாசா.
26 நடராஜா T
27* சின்னத்தம்பி M
29 நடராஜா K
30 கந்தசாமி N
31 செல்வத்துரை C

நயினாதீவு வடக்கு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலை
34 திருநாவுக்கரசு K
35 புவனசுந்தரம் S
36 நடராஜா V
37 கதிர்வேலு S
38 கணபதிப்பிள்ளை N

உடுவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாசாலை
J 39* கணபதிப்பிள்ளை T
40 சுப்பையா S
41 சதாசிவம் K
42 வல்லிபுரம் S
44 சதாசிவம் C

சிறுப்பிட்டி அரசினர் உதவித் தமிழ்க் கலவன் பாடசாலை
49 செல்லையா E

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய தமி. கலவன் பாடசாலை
51 பசுபதிப்பிள்ளை M
52 பாலசுந்தரம் M
53 குமாரசுவாமி [illegible]
54 மருதலிங்கம் V
56 இராமச்சந்திரன் V

தெல்லிப்பழை வீமன்காமம் தமிழ் கலவன் பாடசாலை
J 57 வைத்தியலிங்கம் V

அளவெட்டி நாகபூஷணி வித்தியாசா.
64* தெய்வானைப்பிள்ளை K

நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை
65 சிரோன்மணி S

இளவாலை R C G பாடசாலை
70 அந்திரேசப்பிள்ளை S
72 வைத்தியாம்பிள்ளை S
73 சூசைப்பிள்ளை G
74* வெலிற்சோதிப்பிள்ளை M N
75* திருவேலு G P

உடுவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாசாலை
76 இரத்தினமார்த்தை N
77* கமலாம்பாள் P
78 சரசரத்தினம் P
79 செல்லம்மா S
80 சிவபாக்கியம்பாள் S
82 சிவபாக்கியம் S

கல்முனை

சாய்ந்தமருது R S பாடசாலை
KT 2 சின்னத்தம்பி K
4 முகமட் இஸ்மெயில் A
6 செல்லத்துரை K

கல்முனை மெதடிஸ் பெண்பாடசாலை
KT 9 கந்தையா R
12 கதிரைமலை K
15 கல்லையா R
17 நீலிவாசம் L
18 சுப்பிரமணியம் S
19 காசப்பன் S
20 முருகப்பன் S

மாத்தளை

வெலிகாமம் R S M பாடசாலை
MD 1 குணராசா N
2* [illegible] A A M
3 மௌலானா S M M
4 முகம்மது M C

பருத்தித்துறை

கெருடாவில் Private. M.
PP 3* ஐயாத்துரை M

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தி.
4 சிவப்பிரகாசம் S
5* மதிபாலசிங்கம் V
7* சகலசிரோமணி V
8 சதானந்தன் M
10 சிவகுரு S
11 தனசிங்கம் M
13 வேலாயுதம்பிள்ளை V
14 துரைராசா S

துன்னாலைவடக்கு காசிநாதபாடசாலை
18 கந்தசாமி S

பருத்தித்துறை பெண் துவிபாஷா பாடசாலை
19 முருகுப்பிள்ளை P
20 சினியர் M
21 [illegible] R P
22 உவில்லியம்ஸ் E P
23 கண்மணி R
25 சற்குணம் E P
26* சிவகுரு T
28 இராஜா P S
29* சின்னத்தம்பி H S
30 முத்தையா G
31* இரத்தினம் L I

உடுப்பிட்டி பெண் துவி பாடசாலை
PP32 முத்தையா P
33* பொன்னையா S

சுருட்டுப்பெட்டிக்குள் அபின்

கொக்குவிற் புகைரத நிலையத்திற் கண்டுபிடிக்கப்பட்டது

சென்ற புதன்கிழமையன்று மதுபரிபாலன உத்தியோகஸ்தர்களால் கொக்குவிற் புகைரத நிலையத்தில் ஒரு சுருட்டுப் பெட்டிக்குள் 7 றாத்தல் அபின் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. புகைரதமூலமாக பிறவூருக்கு அனுப்புவதற்காகக்கொண்டுவரப்பட்ட மூன்று சுருட்டுப் பெட்டிகளை மதுபரிபாலன உத்தியோகஸ்தர்கள் திறந்து சோதித்தார்கள் என்றும் அப்போது குறித்த அபின் கண்டுபிடிக்கப்பட்டதென்றும் தெரிகிறது.

*

பிந்திக் கிடைத்த செய்தி

20—5—39

முன் அறிவித்தலைக்கொண்டு மதுப்பரிசோதகர் R. A. வயித்திலிங்கமும் அவரைச் சேர்ந்தவர்களும் சென்ற 15-5-39ந் தேதி பிற்பகல் 3-30 மணியளவில் கொக்குவில் றெயில்வேஸ்ரேஷனுக்குச் சென்றனர். அங்கே மரியான்-இராமன் இரண்டு சுருட்டுப்பெட்டிகளை வார்காமம் முத்துச் சிலாபத்திற்கு V. விநாயகமூர்த்தி பேருக்கு அனுப்பிவிட்டுத் திரும்பி வீட்டை நோக்கி வரும்போது மதுப்பரிசோதகர் அவனைச் சந்தித்து அவனுடைய மடியைச் சோதித்தபோது வார்காமம் ஒன்றைக் கண்டெடுத்தனர். மரியான் இராமனையும் கூட்டிச்சென்று ஸ்டேஷனிலுள்ள சுருட்டுப்பெட்டிகளைச் சோதனை செய்தபோது ஆறரை இறாத்தல் அபின் இரண்டு தகரப்பெட்டிகளுக்குட் கிடக்கக் கண்டெடுத்தனர். இராமனின் கைவிரல் அடையாளங்களை எடுத்தபின்னர் அவனைப் பிணையில் விட்டனர்.

இன்று மரியான் - இராமன்மீது பிரமடியில் வசிக்கும் V. விநாயகமூர்த்தியின் மனைவியாகிய பொன்னம்மாமீதும் 6½ இறாத்தல் அபின் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகளல்லவென்று கூறினர். நீதிபதி முதலாம் எதிரியை 600 ரூபாப்பிணையிலும் இரண்டாம் எதிரியை 600 ரூபா சாதாரணப் பிணையிலும் (சரீரப்பிணை) விட்டு வழக்கை மேல்விசாரணைக்காக வருகிற 20ந் திகதிக்குத் தவணையிட்டார்.

மதுப்பரிசோதகரால் பிடிக்கப்பட்ட அபின் சோதனை செய்வதற்காகக் கொழும்புக்கு அனுப்பப்படுகிறது. இரண்டுபெட்டிகளிலுமுள்ள சுருட்டுக்கட்டுகளை வருகிற 24-5-39 புதன்கிழமை 10 மணியளவில் விற்பனவுசெய்யப்படுமென நீதிபதி அறிவித்தார். ந—கி

அடைவு நகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்ணை மு. ச. இ. ச. கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

திக.	நம்.	ரூ.	பெயர்	ஊர்	நகைவிபரம்
1937 ஜூன்					
9	A. 19	135	அ. மாணிக்கம்	வெள்ளாந்தெரு	பதக்கத்துடன் பூ அட்டியல் 1
15	38	46	ந. இராசதுரை	கீரிமலை	செயின் ஒன்று
30	74	10	மீ. சாதுல்கமீது	சோனகதெரு	காட்பென்டன் 2
ஜூலாய்					
17	134	60	கே. யோசேப்	போலிஸ்டேசன்	டைமன் அட்டியல் 1
19	139	10	ஏ. ஆர் றமதுங்கம்	வட்டுக்கோட்டை	ஒரு மோதிரம்
ஆகஸ்ட்					
2	198	15	அ. இராசையா	தோல்புரம்	மோதிரம் 1
13	245	5	எஸ். எம். கந்தையா	வாணி	மோதிரம் 1
25	289	70	வே சின்னத்தம்பி	பூநகரி	புடிச்சக்கரத்தி அட்டியல் 1
செப்டம்பர்					
4	330	10	நா. காசிப்பிள்ளை	தாராக்குளம்	சுத்துக்கடுக்கன் சோடி 1
5	338	20	தே பொன்னம்பலம்	வெள்ளாந்தெரு	வயிரத் தோங்கட்டான் 1
6	340	76	வ செல்வரத்தினம்	கொட்டடி	மு. அட்டியல் 1
9	363	10	க. சோமசுந்தரக்குருக்கள்	கந்தவனம்	கடுக்கன்சோடி 1
9	364	5	,,	,,	தகடு இரண்டு
9	365	15	தீ. அம்பலவாணர்	திருவடி	கூடு 1
14	387	100	அ. மாணிக்கம்	வெள்ளாந்தெரு	துண்டுச்சங்கிலி 1
15	393	4	செ. சிவப்பிரகாசம்	வெள்ளாந்தெரு	தாலி 1
16	401	12	அ மாணிக்கம்	வெள்ளாந்தெரு	வாளி சோடி 1
18	408	3	வ. ராசேந்திரம்	கோப்பாய்	குச்சி சோடி 1
23	427	20	கே. சின்னத்துரை	நவாலி	நீலக்கல் மோதிரம் 1
27	441	10	செ. சரதுதம்பி	பெரியகடை	செயின் 1
30	457	12	ந. செங்கசாமி	பொலிகண்டி	வே. ஓலை சோடி 1
ஒக்டோபர்					
6	474	150	கே. வேலுப்பிள்ளை	கொக்குவில்	பாம்கல் செயின் 1
11	492	3	ம. குகசப்பிள்ளை	மண்டைதீவு	ஓ. கல் குச்சி 3
21	527	250	மு சபாபதி	கொட்டடி	டொலர் செயின் 1
26	548	5	வே. அம்பலவாணர்	மானிப்பாய்	கடர் குச்சி சோடி 1
29	560	12	த. செல்வநாயகம்	கோப்பாய்	நீலக்கல் மோதிரம் 1
நவம்பர்					
1	575	170	க. வேலுப்பிள்ளை	கொக்குவில்	வயிர ஓலை சோடி 1
8	601	8	எல். கே. அய்யாத்துரை	வண்ணார்பண்ணை	மோதிரம் 1
21	635	50	சி ராசம்மா	கொழும்புத்துறை	ஒட்டுக்கொடி 1
21	639	106	வே. ராமலிங்கம்	கொட்டடி	மு கொடி 1
22	640	500	பொ. நடராசா	பெரியகடை	மு. கொடி 1 கே. கொலிசு சோடி 1 கெட்டிக்காப்பு சோடி 1
23	651	75	செ. யோகரெத்தினம்	பெரியகடை	அச்சுக்காப்பு சோடி 1
டிசம்பர்					
2	689	50	சீ. தம்பிராசா	இளவாலை	பென்டன் 1 சங்கிலி 1
4	694	60	மு. மயில்வாகனம்	ஆனைப்பந்தியடி	வயிர மோதிரம் 1
8	710	450	செ. நடராசா	கன்னாதிட்டி	கே. காப்புசோடி 1 டைமன்சங்கிலி 1
8	711	300	செ. நடராசா	கன்னாதிட்டி	கைச் செயின் சோடி 1 வயிர ஓலை சோடி 1
9	720	15	வே. நாகமுத்து	வெள்ளாந்தெரு	தாலி 1 வாளி சோடி 1
12	739	45	இ. சின்னையா	ஆனைக்கோட்டை	மீவதுகாப்பு சோடி 1
22	793	13	ம. இராசையா	சுந்தர்படர்	சிறுகாப்பு சோடி 1
1938 ஜனவரி					
3	845	15	அ. குமாரு	தோல்புரம்	சி. ஓலை சோடி 1
10	893	15	சீ. தம்பிராசா	இளவாலை	கவுந்தோர் சோடி 1
10	894	70	சீ. தம்பிராசா	இளவாலை	காப்பு சோடி 1
16	945	7	மா. வயிரவப்பிள்ளை	மாதகல்	சுத்துக்கடுக்கன் சோடி 1
16	948	80	ச. வல்லிபுரம்	கொக்குவில்	வயிர ஓலை சோடி 1 மோதிரம் 1
27	1011	2	ஆ. செல்லம்மா	மண்டைதீவு	குச்சி 2 கம்பி 1
27	1012	20	இ. சோமு	புத்தூர்	டிம்மி பிடித்த பதக்கம் 1 குச்சி 1
28	1016	8	ம. மதுரசாமி	செம்மாதெரு	சிகப்பு ஓலை சோடி 1
29	1025	70	சி. சபாரத்தினம்	மண்டைதீவு	சி. ஓலை சோடி 3 கடுக்கன் சோடி 2
பெப்ரவரி					
1	1035	25	து. சந்திரபோ	நாவாந்துறை	ஒற்றைச்சிறுகாப்பு
2	1048	60	வ. இராசேந்திரம்	கோப்பாய்	அல்பேட் செயின் 1
4	1064	8	அ. வேலுப்பிள்ளை	அராலி	மோதிரம் 2
5	1071	90	சி. இளையப்பு	கோப்பாய்	கை காப்பு சோடி 1
5	1072	40	சீ. சீ. ராசா	உடுவில்	பென்டன் 1 புறேச 1
12	1131	8	சி. வல்லிபுரம்	கைதடி	வாளி சோடி 1
19	1141	31	க. சண்முகம்	நல்லூர்	தாலி 1 ஓலை சோடி 1
20	1151	6	வ. இராசேந்திரம்	கோப்பாய்	வே ஓலை சோடி 1
21	1163	5	வே. கார்த்திகேசு	மண்டைதீவு	மோதிரம் 1
21	1165	21	த முருகேசு	புத்தூர்	இ. சிகப்பு ஓலை சோடி 1 பதக்கம் 1
23	1171	70	நா. அருளம்பலம்	பெரியகடை	மினதுகாப்பு சோடி 1
24	1174	70	அ. சின்னத்துரை	பெரியகடை	சேடி டொலர் 1 ப. முத்து மோதிரம் 1
மார்ச்					
2	1193	12	க. நடராசா	தாராக்குளம்	சிறுகாப்பு சோடி 1
2	1202	10	அ. கதிரவேலு	கோண்டாவில்	பதக்கம் 1
5	1209	40	சி. அந்தோனிப்பிள்ளை	கொழும்புத்துறை	கைச்செயின் 1
7	1218	50	செ. அகம்மது	சோனகதெரு	18 அலுக்குத்து
8	1224	27	க. வேலுப்பிள்ளை	கொக்குவில்	நீலக்கல் பென்டன் 1 மோதி 1
9	1229	15	மு. இராசையா	ஆனைப்பந்தியடி	சி ஓலை சோடி 1
10	1231	105	சி. இராசம்மா	கொழும்புத்துறை	பதக்கத்துடன் அட்டியல் 1
14	1247	120	மு சுல்தான் அப்துல்காதர்	சோனகதெரு	சவடிகொடி 1 காப்பு 1
16	1254	30	ஏ. சுப்பிரமணியர்	கொக்குவில்	அல்பேட் செயின் 1
16	1259	3	மு. நாகமணி	பெரியகடை	கலாவளை குச்சி சோடி 1
18	1272	60	என். எம். முகம்மது	சோனகதெரு	சவடி கொடி 1
23	1305	5	வ. சண்முகம்	பெரியகடை	சி. கலாவளைக்குச்சி சோடி 1
24	1308	30	ஏ. சோமு	புத்தூர்	கூடு 1
26	1320	4	ஏ. முருகேசு	புத்தூர்	சி. கல் குச்சி சோடி 1
26	1323	16	க. பொன்னம்பலம்	பெரியகடை	சிறுகாப்பு சோடி 1
5-2-38	1069	15	கு. சிவஞானம்	கொக்குவில்	தாலி 1
1937 ஜூலாய்					
24	C.3458	16	ப. சின்னத்துரை	கொட்டடி	வே, கல் புறேச 1
28	3477	10	க. நல்லதம்பி	மண்டைதீவு	இமி ஓலை சோடி 1
ஆகஸ்ட்					
28	3588	16	ந. பொன்னுத்துரை	அச்சுவேலி	காசமணி 1
செப்டம்பர்					
6	3629	54	ச. கந்தையா	சுளிபுரம்	வு. காப்பு சோடி 1
16	3670	16	நா. வல்லிபுரம்	கொட்டடி	புறேச 1
16	3673	10	மு. இராசையா	கொட்டடி	இமி ஓலை சோடி 1
20	3689	10	வே. துரையப்பா	கொட்டடி	இரண்டு குச்சி
20	3691	55	மு. கந்தையா	நல்லூர்	ஒரு சங்கிலி
25	3711	58	செ. தம்பிப்பிள்ளை	அத்தாணந்தாழ்வு	பென்டனுடன் சங்கிலி 1
25	3712	10	சி. சின்னத்தங்கம்	கொட்டடி	ஒரு சோடி சிகப்பு ஓலை
27	3718	80	சி. சின்னவன்	புங்குடுதீவு	கப்பிப்பூவட்டியல் 1 கரிசமணி 1 புறேச 1
28	3722	15	பொ. தம்பிப்பிள்ளை	ஆரியகுளம்	1 கரிசமணிக்கோர்வை
29	3724	14	வே. துரையப்பா	கொட்டடி	1 சோடி வே. ஓலை
ஒக்டோபர்					
3	3742	10	க. ஆறுமுகம்	கொழும்புத்துறை	1 சோடி இமி ஓலை
7	3754	175	நா. குமாரு	கொட்டடி	1 சோடி காப்பு 1 பென்டன் சங்கிலி 1 சோடி வே. ஓலை
14	3775	7	வ. பர்வதம்	பெரியகடை	1 சோடி சுத்துக்கடுக்கன்
17	3782	286	வீ. நடராசா	ஆனைப்பந்தியடி	1 சோடிகாப்பு 1 டைமன் அட்டியல் தாலி 1
26	3809	30	என். எஸ். அல்லாபிச்சை	சோனகதெரு	இரண்டுகோர்வைமணி
நவம்பர்					
11	3847	16	நே. பொன்னம்பலம்	வெள்ளாந்தெரு	ஒரு கொண்டைக்கூர்
29	3889	21	இ. தங்கம்	நாவாந்துறை	வே. ஓலை சோடி 1
30	3892	8	சி. சின்னச்சி	கொட்டடி	ஒருசோடி இமி ஓலை
டிசம்பர்					
11	3933	8	க. சின்னையா	கொட்டடி	ஒரு சோடி இமி ஓலை
20	3951	8	சி. துரை	கொக்குவில்	ஒரு சோடி ஓலை
23	3962	5	மு மு. அப்துல்காதர்	சோனகதெரு	பென்டன் கல் 1
28	3982	12	த. நாகன்	பெரியகடை	1 இமி பதக்கம்
29	3985	6	த. பொன்னம்மா	பெரியகடை	சுத்துக்கடுக்கன் சோடி 1
29	3986	12	க. சிவலிங்கம்	மண்டைதீவு	அல்பேட்சங்கிலி 1
30	3991	4	இ. இளையதம்பி	கொட்டடி	பொன்னப்புக்குச்சி சோடி 1
1938 ஜனவரி					
12	4023	45	ச. ராசலிங்கம்	கொட்டடி	ஒரு அல்பேட் செயின்
12	4026	610	நா. அமிர்தலிங்கம்	கொட்டடி	ஒரு சோடி வே. ஓலை ஒரு கல் அட்டியல் ஒருசோடி வைரம்
பெப்ரவரி					
10	4091	13	இ. செல்லையா	புங்குடுதீவு	ஒரு மோதிரம்
19	4108	200	வி. சிற்றம்பலம்	கொட்டடி	ஒரு சங்கிலி ஒரு அட்டியல்
26	4120	37	யா. சவுரிமுத்து	அல்லைப்பிட்டி	அட்டியல் 1
26	4121	52	ச. அந்தோனி	நாவாந்துறை	கல் அட்டியல் 1
மார்ச்					
11	4144	14	நா. சுப்பையா	செம்மாதெரு	ஒருசோடி சிறுகாப்பு
21	4158	15	பொ. ஆசைப்பிள்ளை	சுளிபுரம்	ஒரு மோதிரம்
21	4160	2	மு. நடேசு	கந்தரோடை	குச்சி 4
24	4174	10	சீ. தம்பிராசா	இளவாலை	இமி பதக்கம் 1
3	4191	23	என். ஆர். பி. முதலி	பெரியகடை	ஒரு மோதிரம்
ஏப்ரல்					
5	4196	3	சீ. கற்பகம்	உடுவில்	ஒருசோடி காதுப்பூ
16	4217	13	ஆ. வேலுப்பிள்ளை	நவாலி	ஒரு மோதிரம்
1937 மார்ச்சு					
21	2923	200	வ. இராசமுத்து	நாவற்குளி	செய்கொடி
27	2942	12	கா. பொன்னுத்துரை	சிறம்பியடி	கொண்டைக்கூர் 1
மே					
3	3076	16	சீ. தம்பிராசா	இளவாலை	கொண்டைக்கூர் 1
19	2913	20	என். எஸ். அல்லாப்பிச்சை	சோனகதெரு	காதோலை சோடி 1 மோதிரம் 1
ஏப்ரல்					
17	3016	80	வ. ராசேந்திரம்	கொட்டடி	மு. கொடி 1
1935 ஆகஸ்ட்					
30	1805	6	சீ. கிருஷ்ணன்	பறங்கித்தெரு	கூடு 1

விற்பனவு:- நிகழும் பிரமாதி வருடம் வைகாசிமீ 20-ந் திகதி(3-6-39)சனிக்கிழமை காலை 10 மணிதொடக்கம் எடுபட்ட நகை நீங்கலாக மீதி மேற்படி கடையிற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயாம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்,

Mis, 36 18 & 22-5 39

யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம்
[வரையுளது]
1918—ம் ஆண்டு ஸ்தாபிதமானது
அதிகாரம் பெற்ற மூலநிதி ரூபா—100,000
100 ரூபா விகிதமான 1000 பங்குகள்
சேமநிதி 23237—39
சென்ற 19 வருஷங்களுக்குக் கொடுபட்ட லாபம் ரூபா 800,00-00

வட இலங்கையில் சம்மக்களால் ஒற்றுமை நடத்தப்படும் வியாபார நிலையம் இதவொன்றே. தேசிய முன்னேற்றத்தை நோக்கி உங்களுடைய மிச்சங்களைக் கொண்டு சங்கத்தில் பங்குகளை எடுத்து வியாபாரத்தை மேலோங்கச் செய்வதற்கு முன்வாருங்கள். அத்துடன் கடையிற் சாமான்களை வாங்கி ஆதரியுங்கள். சென்ற வருஷங்களுக்கு நல்ல லாபம் கொடுபட்டன.

Y 175. 24-10-38 to 23-10-39) (ஜ)

யாழ் நகரில் சுத்தமான கோதுமையினால் தின் பண்டங்கள் முதன்மையாய் விற்குமிடமெது?

1865ம் ஆண்டு எஸ். பேதுருப்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்று தற்போது தி பிறிமியர் பேக்கரி என அழைக்கப்படும் ரொட்டிச்சாலை மாத்திரமே

இங்கே சுத்தமான கோதுமை அப்பம் விஸ்கோத்து வகைகளும், இனிமையான கேக் சிற்றுண்டி வகைகளும், நவீன முறையில் சுகாதார விதிப்படி மதக் கோட்பாடுகளுக்கு எதிர்ப்பில்லாத சேர்ப்புகளினால் தயாரிக்கப்பெற்று மட்டான விலையில் விற்கப்படும்.

கலியாண காலங்களுக்கும், கல்லூரி ஆண்டுவிழாக் கொண்டாட்டங்களுக்கும் முக்கியமான சிற்றுண்டி விருந்துகளுக்கும், கேக், அதிரச வகைகள் மதுரமாயும் கவர்ச்சியாயும் அதிக சகாய விலைக்கு உடன் தயாரித்துக் கொடுக்கப்படும்.

The Premier Bakery
(பேதுருப்பிள்ளை ரொட்டிச்சாலை.)
Bakers—Confectioners—Caterers
Bankshall Street Jaffna
Estd. 1865. 'Phone. 44.

Y 160 29-9-38—28-9-39 தீ

உண்ணாவிரத மிருக்கும் பாம்பு

3மாதமாகச் சலபானங் கூடச் செய்யவில்லை

உதகமண்டலம், மே 13—

உதக மண்டலத்திற்கு வந்திருக்கும் வியன்னா வாசியான ஹெர் ஆட்டோ, பிருக்கெல் ஜானி என்ற பெயருள்ளவொரு பாம்பைச் செல்லமாக வளர்த்து வருகிறார்.

இது 2 தலையுள்ள பாம்பாகும். 3மாதங்களுக்கு முன்பு அவர் இதனை ஷோலாப்பூர் டிஸ்திரிக்கிற்பிடித்தார். 3மாதங்களாக இந்தப் பாம்பு உணவு உட்கொள்ளவோ பானம் எதுவும் பருகவோ மறுக்கிறதாம். இது சந்தோஷமுள்ளதாக இருக்கிறது. ஜானி என்று அழைத்தால் அது சிறிய மரப் பெட்டியிலிருந்து மெதுவாக ஊர்ந்து வந்து ஆட்டோ பிருக்கெல் தன்னை இஷ்டப்படி எல்லாம் ஆட்ட இடமளிக்கிறது. ஆட்டோ புருகெல் பாம்பு பிடிப்பதில் கெட்டிக்காரர். இவர் இந்தியாவில் 2½-வருஷங்களாக இருந்து வருகிறார். 1300 பாம்புகளை அவர் பிடித்திருக்கிறார். இவற்றில் 243நாக பாம்புகளையும், ரஸல்வைப்பர்போன்ற கொடிய பாம்புகளையும் பிடித்திருக்கிறார். இவர் விஷத்தைத் தடுப்பதற்காகப் பாம்புகளின் விஷப்பைகளைப் பறித்து விடுகிறார். ரசல் வைப்பர் என்ற சாதிப்பாம்பின் விஷத்திலிருந்து செய்யும் ஒரு மருந்திலிருந்து எல்லாவிதமான பாம்புக் கடியையும் தீர்க்கலாமாம். நாகபாம்பு விஷத்திலிருந்து எடுக்கும் மருந்தினால் நால்ஜியா என்ற நரம்புசம்பந்தமான வியாதிகளைப் போக்கலாமாம். இவர் அடுத்த வருஷம் வியன்னாவுக்குப் பிரயாணமாவார். 2½வருஷங்கள் வரை பாம்புகள் உணவில்லாதிருப்பதாகக் கூறுகின்றனர்.

கனடாவிற் குதூகலம்

'எம்பிறெஸ் ஒவ் ஆஸ்திரேலியா' ஆர்லியன்ஸை அடைந்தது

க்யூபெக், மே, 17—

நடுச்சாமத்திற்கு முன் க்யூபெக்குக்கு 14 மைல்களுக்குக் கிழக்கே ஆர்லியன்ஸ் தீவுக்கருகில் "எம்பிறெஸ் ஒவ் ஆஸ்திரேலியா" நங்கூரம் போட்டது. காலை 8 மணிக்கு அது நங்கூரத்தை எடுத்து வுல்ப்ஸ் கோவுக்கு வந்து சேரும். இங்கு மன்னர் தம்பதிகள் 10-30 மணிக்குக் கரையில் இறங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கனடாவில் இதுபற்றிப் பெருங் குதூகலம் ஏற்பட்டிருக்கிறது.

பாலஸ்தீனத்தில் துருக்கித் தொப்பிகள்

—0—

நகரவாசிகள் மீளவும் உபயோகிக்கின்றனர்

ரக்பி, மே, 16—

பாலஸ்தீனத்திலிருந்து திரும்பும் பிரயாணிகள், அங்குள்ள நகரஜனங்கள் தங்களுக்கு வழக்கமான துருக்கித் தொப்பிகளை மீளவும் அதிகம் அதிகமாகப் பாவிக்கத்தொடங்கியிருத்தல் பற்றித் தெரிவிக்கிறார்கள். அங்கு கலக நிலைமை மாறி வழக்கமான நிலைமை அதிகம் அதிகமாக ஏற்பட்டுக்கொண்டு வருவதற்கு இஃது ஓர் அறிகுறியாக இருப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

பயங்கர இயக்கம் மும்முரமாக நடந்துவந்த காலத்திற் பாலஸ்தீனத்திற்குரிய புடவையாலும் நாற்கயிற்றாலும் செய்யப்பட்ட தொப்பிகளை அணியுமாறு கொள்ளைக்கூட்டத் தலைவர்கள் நகரவாசிகளை வற்புறுத்த முயன்றார்கள். இத்தொப்பி நகரவாசிகளுக்குப் பொருத்தமற்றதாகவிருந்தது. இப்பொழுது நகரவாசிகள் கொள்ளைக்கூட்டத்தாருக்குப் பயப்படாதவர்களாய்த் தங்களுக்கு வழக்கமான துருக்கித் தொப்பிகளை மீளவும் அணியத் தொடங்குகிறார்கள்.

KERALA
Vep
SOAP
KERALA SOAP INSTITUTE, CALICUT

கேரள வெப் சோப்

சருமத்திற்கு உற்சாகம் விளைக்கக் கூடிய உயர்தரமானது

அழகான பெண்களுக்குரிய சோப்

எங்கும் கிடைக்கும்

ஏஜென்ஸ்: தேவார் அன் கம்பனி, 57, மெயின் ஸ்ரீட், கொழும்பு.

Mis 159, 17-11-38—

விளம்பரம்

கோளாவல்பூர்விவேகாநந்த தமிழ்வித்தியாசாலைக்குப் பயிற்றப்பட்ட தாராதரப் பத்திர முடைய ஓர் ஆசிரியர் தேவை. இவர் ஆங்கிலமுங் கற்பிக்கக் கூடிய அறிவுடையவராயிருத்தல் வேண்டும். ஆச்சிரமத்தில் சமயபாட வகுப்பும் நடத்தக் கூடிய சமய அறிவுடையோராயிருப்பின் உத்தமம்.

வேண்டுவோர் போதிய விபரங்களுடன் நீழ்க்காணும் விலாசத்திற்கு மனுப் பத்திரங்களை 31-5-39 க்குள் அனுப்புக.

வை. பொனனுத்துரை,
"பூமனை", சுன்னாகம்,
5—5—39

Mis 30 8—15—5—39

Nº 777

மலேறியாவுக்கு

நியாயத்துக்கு ஒத்துக்கொள்ளக்கூடிய மாற்று மருந்து

பைரெக்ஸ்

நீடித்தகாலமாகப் புகழ்பெற்று விளங்கும்
நம்பியிருக்கத் தகுந்த

காலவரையறைவு
குறைவான கலவை,

பெங்கால் கெமிக்கல்
கல்கத்தா, பம்பாய்.

ஏஜென்ஸ்:
தேவார் அன் கோ,
மெயின் ஸ்ட்ரீட், கொழும்பு.

(Mis 159. 10-9-37—

N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo

(Y 65 1-4-38—31-3-39) Telephone No. 30.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை
என்றுஞ் சிவன்றாளினை

சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமால்தாகா, பீதாஸ், சாலாமுஸ்லி, சப்பேமுத்வலிபிஸ்தால், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை நாகப்பூ, லங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருடைத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தசாமாலை, பித்த பாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ருத்தலுக்கு ரூபா 10. கால்ருத்தலுக்கு ரூபா 5. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொலைவாசிராச்சியப்பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததனால் முன் பணம் ஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
வீட்டுஇலக்கம் 33, பழையவாடிரோட்டு, கோட்டமுனை, மட்டக்களப்பு, சிலோன்.

(Y. 64. 1-1-39 to 31-12-39.)

யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி

1918-ம் ஆடு ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134.36700
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக் கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம். காணி ஈடாக வைத்துக் கொண்டு பிணையுடன் கடன் கொடுக்கலாம். (இத்தக்கடனையும்) பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்து கொள்ளலாம்.

225. 21-11-38—20-11-39

S. கனகசபை
சிறுப்பர்.

இராஜகோட்டையில் மகாத்மா காந்தி

மிதவாத அபிப்பிராயங் கொண்ட சமஸ்தான பிரஜைகளுடன் ஆலோசனை

ராஜகோட் மே 14

ராஜகோட்டைப் பிரஜைகளுள் மிதவாதிகளானவர்களுடன் மகாத்மா காந்தி கலந்து பேசினார்.

அங்கு 40 மிதவாதிகள் 20 பரிஷத் தொண்டர்கள் பிரசன்னமாக விருந்தனர். மிதவாதிகள் மீண்டும் மகாத்மாவைச் சந்திப்பார்கள்.

திரு. தாணுப்பிள்ளையின் தலைமையில் வந்த தூதுக் கோஷ்டியினர் மகாத்மாவைச் சந்தித்து இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

திரு. தாணுப்பிள்ளை முதலியோர்கள் நாளைக்கும் மகாத்மாவைக் காண்பார்களென்று தெரியவருகின்றது.

மகாத்மாகாந்திஜீ நால் நூற்கும் வகுப்பு ஒன்றை நடத்தினார். மிதவாதிகளின் பிரதிநிதியாகிய காளிதாஸ் பரேக் காந்தியடிகளை இன்று பிற்பகல் பேட்டி கண்டார். நாளைக்கும் இவர் மகாத்மாவைப் பேட்டி காணுவார்.

இப்பேச்சு வார்த்தைகளை நீடிக்கு முன் திரு. வீரவல்லா சீர்திருத்தங்கள் விஷயத்தில் எவ்வளவு தூரம் விட்டுக் கொடுப்பார் என்று தெரிந்து கொள்ள மகாத்மா விரும்புகின்றார்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva PrakasaPress, Vannarponnai, Jaffna on Monday, May 22th.